# தமிழ்ப் புலவர் பெருமக்கள்

# I

வித்துவான் டி. கண்ணம்மாள்,
தமிழாசிரியை,
சி. எஸ். எம். பெண்கள் நடுத்தரப்பள்ளி,
தம்புசெட்டித்தெரு, சென்னை–I.

விந்தியா பப்ளிகேஷன்ஸ்
வேப்பேரி : : சென்னை

முதற் பதிப்பு—1950

காபிரைட்

விலை அணா 12

Kabeer Printing Works, Madras-5

# முன்னுரை

தமிழ்ப் புலவர் பெருமக்கள் என்னும் வரிசையில் வெளிவரும் இம் முதல் நூல் (1) அஷ்டாவதானம், பூவை—கலியாணசுந்தர முதலியார், (2) வெ. ப. சுப்பிரமணிய முதலியார், (3) ஆயுர்வேத ரத்நாகரம், பண்டிதை—மனோன்மணி அம்மையார், (4) அரசஞ் சண்முகனார் என்னும் புலவர் பெருமக்களின் வரலாறுகளைக் கொண்டது. இவ் வரலாறுகள், இப்புலவர்கள் தமிழ்க்கல்வி கற்றமை, அவர்கள் தமிழுக்குப் பல வழிகளிலும் தொண்டு செய்த முறை, அவர்தம் அரிய பண்புகள், அக்கால சமூக நிலைமை முதலியவற்றை உணர்த்தவல்லவை. இப்புலவர் பெருமக்கள் வரலாறுகள், தமிழுணர்ச்சி மிக்குள்ள இக்கால மாணவர்கட்குத் தமிழ் நூல்களைக் கற்கவேண்டும் என்னும் ஆர்வத்தையும், தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்னும் உணர்ச்சியையும் உண்டாக்கவல்லவை. தமிழறிஞர் இந்நூலை ஆசீர்வதிப்பாராக!

ஆசிரியை

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|

## I. அஷ்டாவதானம்
## பூவை—கலியாணசுந்தர முதலியார்

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்விப் பயிற்சி | ... | 1 |
| 2. | முதலியாரிடம் பாடம் கேட்டவர் | ... | 11 |
| 3. | தமிழ்ப்பணியும் நற்பண்புகளும் | ... | 15 |

## II. வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

| | | | |
|---|---|---|---|
| 1. | முதலியாரது வாழ்க்கை வரலாறு | ... | 19 |
| 2. | முதலியாரும் தமிழ்ப் பயிற்சியும் | ... | 24 |
| 3. | முதலியார் செய்த தமிழ்ப்பணி | ... | 26 |

## III. ஆயுர்வேத ரத்நாகரம்
## பண்டிதை—மனோன்மணி அம்மையார்

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழகமும் பெண்கல்வியும் | ... | 32 |
| 2. | இளமையும் கல்விப் பயிற்சியும் | ... | 37 |
| 3. | திருமண வாழ்க்கை | ... | 42 |
| 4. | சென்னை வாழ்க்கை | ... | 44 |

## IV. சோழவந்தான்—அரசஞ்சண்முகனார்

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்விப் பயிற்சி | ... | 53 |
| 2. | தமிழாசிரியர் பணி | ... | 59 |
| 3. | தமிழ்த்தொண்டும் நற்பண்புகளும் | ... | 64 |



அஷ்டாவதானம்
பூவை - கலியாணசுந்தர முதலியார்

# தமிழ்ப்புலவர் பெருமக்கள்

## I

## I. அஷ்டாவதானம்

### பூவை–கலியாணசுந்தர முதலியார்

(கி. பி. 1854—1918)

### 1. கல்விப் பயிற்சி

**முன்னுரை**

வடக்கே வேங்கட மலையிலிருந்து தெற்கே குமரி வரைப் பரவிக்கிடக்கும் நிலப்பகுதியில் பேசப்படும் மொழி தமிழ். அதனால் இப்பகுதி தமிழகம் அல்லது தமிழ் நாடு என்று சொல்லப்படுகிறது. தமிழைப் பேசும் மக்கள் தமிழர். தமிழ்மொழி உலகப் பழைய மொழிகளில் ஒன்றாகும். அம்மொழியில் ஏறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக நூல்கள் இருக்கின்றன. அவை இலக்கிய இலக்கண நூல்கள். அவற்றைச் செய்தவர்கள் தமிழ் மொழியில் அறிவு பெற்ற பெருமக்கள். அவர்கள் தமிழ்ப் புலவர்கள் என்று மக்களால் அழைக்கப்பட்டனர். ‘ புலவர் ’ என்பதற்கு ‘ அறிஞர் ’ என்பது பொருள்.

இத்தகைய அறிஞர்கள் நூற்றாண்டுதோறும் தோன்றிப் பல நூல்களைச் செய்துள்ளனர். அப்

புலவர் பெருமக்களால்தான் மொழி வளர்ச்சியடைந்து கொண்டே வருகின்றது. ஒரு மனித சமுதாயத்திற்கு உயிர்நாடியாயுள்ள மொழியை வளர்க்கின்ற புலவர் களை அச்சமுதாயம் அறிவுடையவர் என்று போற்றி வணங்கும். புலவர்கள் அவ்வாறு சமுதாயத்தினுல் பழங்கால முதலே போற்றப்பட்டுவந்தார்கள்; முடி மன்னராலும் குறுநில மன்னராலும் செல்வராலும் ஆதரிக்கப்பெற்று வந்தனர். இவ்வாறு ஒவ்வொரு நூற்ருண்டிலும் வாழ்ந்து, அவ்வக் காலத்திற்கு ஏற்ற வாறு நூல்களைச் செய்து தமிழ் இனத்தைச் சிறப் பித்துவந்த புலவர் பெருமக்கள் பலர். பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற் ருண்டின் முற்பகுதியிலும் பெரும்புகழுடன் வாழ்ந்து மறைந்த புலவருள் நால்வர் வரலாறுகள் இச்சிறு நூலில் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து, அப் பெருமக்களுக்கு நமது வணக்கத்தைச் செலுத்தி, அவர்கள் வரலாறுகளிலிருந்து அறியப்படும் நல்லன வற்றை மேற்கொள்வது நமது கடமையாகும். இங்குக் கூறப்பட்டுள்ள நாற்பெரும் புலவருள் முத லிடம் பெற்றுள்ளவர் அஷ்டாவதானம் பூவை— **கலியாணசுந்தர முதலியார்** ஆவர்.

## முதலியார் மரபு

பூவை கலியாணசுந்தர முதலியார் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர்; புத்தவேடு என்னும் கிராமத் தில் வேளாளர் மரபிற் பிறந்தவர். அவர் மரபு அறு பத்து மூன்று நாயன்மாருள் ஒருவராகிய வாயிலார் நாயஞர் பிறந்த மரபாகும். அம்மரபில் வந்த முதலி

மார்கள் வீரத்திலேனும் அல்லது பக்தியிலேனும் சிறந்து விளங்கிவந்தனர். அம்மரபில் தோன்றிய சாமி முதலியார் என்பவர் தமிழ், ஆங்கிலம், உருது இவற்றில் வல்லவராய் இருந்து, ஹைதராபாத் சம்ஸ்தானத்தில் உயர்ந்த பதவியில் இருந்தார். அவர் ஹைதராபாத் அரசருடன் ஒரு நாள் வேட்டைக்குச் சென்றார்; அரசர் பார்க்க, புலி ஒன்றுடன் அரை மணி நேரம் விளையாட்டாகப் போரிட்டு இறுதியில் அதனைக் கொன்றார். அரசர் அவரது வீரத்தைப் பாராட்டி ஆயிரம் ரூபாய் உபகாரச் சம்பளமாகக் கொடுத்துவந்தார்.

சாமிமுதலியார் மகனான சுப்பராய முதலியாரும் பெரிய வீரர்; மிக்க உடல் வலிமை படைத்தவர். அவர் ஹைதராபாத்திலும், பிறகு ஆர்க்காட்டு நவாபினிடத்திலும் பொறுப்புள்ள உத்தியோகத்தில் இருந்தார். அவருடைய குமாரர் அண்ணுசாமி முதலியார் என்பவர். இவர் பஞ்சதந்திர நூல் செய்த தாண்டவராய முதலியாரிடம் பல ஆண்டுகள் தமிழைக் கற்றார்; ஆங்கிலத்திலும் அறிவு பெற்றார். இவர் சிலம்ப வித்தையில் நன்கு தேர்ந்தவர். அக்காலத்தில் சிறந்த தமிழ்ப் புலவராக இருந்த இராமசந்திர கவிராயர் என்பவர் அண்ணுசாமி முதலியாருடைய பலவகைத் திறமைகளையும் பாராட்டிச் செய்யுள் பாடியுள்ளார். அண்ணுசாமி முதலியார் இரங்கூன், பர்மா முதலிய கடல்கடந்த நாடுகளில் சில ஆண்டுகள் உத்தியோகம் பார்த்தார்; பிறகு ஓய்வு பெற்று, சென்னையை அடுத்த பரங்கிமலையை அடைந்து தங்கினார்.

## முதலியார் பிறப்பு

அண்ணுசாமி முதலியாருக்கு வாய்த்த மனைவியார் வேளாள மரபுக்கேற்ற மங்கை நல்லார். அவர் விருந்தினரை உபசரிக்கும் வேளாளர் குடும்பத்தில் பிறந்தவராதலால் யாவரிடத்திலும் மிகுந்த அன்பு காட்டினர்; ஏழைகளுக்கு ஆதரவு காட்டினர்; யாவரையும் தம் இனிய சொற்களாலும் மலர்ந்த முகத்தாலும் மகிழ்வித்தார். அண்ணுசாமி முதலியாரின் வீரத்திற்கு மாருக அம்மையாரிடம் அன்பும் ஆதரிப்பும் காணப்பட்டன. அவருடைய சுற்றத்தாரும் நண்பர்களும் அம்மையாரிடம் அளவற்ற அன்பும் மதிப்பும் கொண்டிருந்தனர். அப்பண்பிற் சிறந்த அம்மையாருக்கும் அண்ணுசாமி முதலியாருக்கும் பிறந்தவரே நமது புலவர் பெருமாளுகிய பூவை—கலியாணசுந்தர முதலியார். அவர் 1854-ஆம் ஆண்டு மே மாதம் 10-ஆம் நாள் பிறந்தார்.

## தமிழ்க்கல்வி கற்றல்

முதலியாரின் தந்தையார் பரங்கிமலையிலிருந்து, சென்னையையடுத்த பூவிருந்தவல்லி என்னும் ஊரிற் குடியேறினர்; தம் செல்வ மைந்தர்க்கு ஐந்து வயது தொடங்கியதும் தமிழ்ப்பள்ளியில் கல்வி கற்க விட்டார். அப்பள்ளி ஆசிரியர் பூங்காவனக் கவி என்பவர். அவர் சிறந்த தமிழ்ப் புலவர்; பிள்ளைகள் தகுதிக்கேற்றபடி அன்பாகப் பாடம் நடத்துபவர். அவர் முதலியாரின் நுண்ணறிவையும், மனப்பாடம் செய்யும் திறமையையும் கண்டு அவரிடம் அன்பு

கொண்டார் ; முதலியாருக்குச் சிறு நூல்களிலிருந்து படிப்படியாகப் பல நூல்களைக் கற்பிக்கத் தொடங்கினார் சில ஆண்டுகட்குள் முதலியார் செய்யுளியற்றும் ஆற்றல் பெற்றார். அவர் பூவிருந்தவல்லியில் உள்ள சுந்தர விநாயகர்மீது ஒரு வெண்பாவை இயற்றினார்; தந்தையார் கட்டளைப்படி நாள்தோறும் திருமுருகாற்றுப்படையை ஓதிவந்தார்.

ஒரு நாள் பூங்காவனக் கவிஞர் பள்ளியில் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகள் எல்லோரையும் பிரம்பால் அடித்தார். அவர் பள்ளியில் விளையாடாத நமது முதலியாரையும் அடித்தார். முதலியார் மிகுந்த வருத்தமுற்றார். ஒரு குற்றமும் செய்யாத தம்மைத் தண்டித்த ஆசிரியரை நன்கு விசாரிக்குமாறு தம் தந்தையாருக்கு ஒரு வெண்பா [1] எழுதியனுப்பினார். தந்தையார் அதைக் கண்டு மிகுந்த வருத்தமும் சீற்றமும் கொண்டார் ; கவிஞரைச் சந்தித்துத் தம் மைந்தர் எழுதிய வெண்பாவைக் காட்டினார். கவிஞர் முதலியாரது கவிபாடும் ஆற்றலைப் பாராட்டினார் ; தாம் செய்த தவற்றுக்கு மன்னிப்பு வேண்டினார். அண்ணாசாமி முதலியார் தமிழும் ஆங்கிலமும் சேர்த்துக் கற்பிக்கப்பட்ட வேறு ஒரு பள்ளியில் தம் புதல்வரைச் சேர்த்துவிட்டார். முதலியார் அன்றுமுதல் ஆங்கிலமும் தமிழும் கற்றுவந்தார்.

1 " எவ்விதக் குற்றமும்யான் இன்றுசெய் யாதிருக்க
எந்தன் தொடையதனி லேன்சூடு—வந்ததெனப்
பூரணமாய்க் கல்விகற்ற பூங்கா வனக்கவியைக்
காரணநீ கேட்டிடுக கண்டு "

## சூரனைச் சினந்து வெண்பா

ஒரு நாள் முதலியார் சில மாணவர்களுடன் பாடசாலையிலிருந்து வீடு செல்லும் பொழுது, வழக்கத்திற்கு மாருகக் குறுக்கு வழியிற் செல்ல விரும்பி, ஒரு கீரைத் தோட்டத்தில் நுழைந்தனர். அத்தோட்டக்காரனை சூரன் என்பவன், அப்பிள்ளைகள் கீரைப் பாத்திகளை மிதித்துவிட்டனர் என்று கருதினன்; கோபம் கொண்டான்; வளார் ஒன்றினல் அப்பிள்ளைகளைத் துரத்தி அடிக்க முயன்ருன். பிள்ளைகள் ஓடிவிட்டார்கள். மெதுவாக நடந்துவந்தவர் நமது முதலியார்; அதனுல், பாபம்! அவர் சூரனிடம் அகப்பட்டுக்கொண்டார். சூரன் அவரை நன்ருக அடித்துவிட்டான். அடிபட்ட முதலியார் தோட்டத்தைக் கடந்தார்; பக்கத்தில் இருந்த காளி கோயிலுக்குச் சென்ருர்; காளியைப் பணிந்து ஒரு வெண்பா[2] பாடிஞர். அன்றிரவு அச்சூரன் தெய்வச் செயலாய் ஏற்றக்கோலின் மேலிருந்து விழுந்து முடவனுயினனும்.

## இராமலிங்கத் தம்பிரான் மாணவர்

இராமலிங்கத் தம்பிரான் என்பவர் சிறந்த தமிழ்ப் புலவர். அவர் சென்னையில் வாழ்ந்துவந்தார். 1869-இல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கத் துவங்கிய நமது முதலியார், தம்பிரானவர்களிடம்

2 " தோட்டக்கா ரச்சூரன் தோன்றி வளாரடியைப்
போட்டான் முதுகில் பொறுக்கேனுன்—தோட்டிதழ்சேர்
தாராருங் சாளியே ! தாரணியில் அன்னவனைப்
பாராம லேயிருக்கப் பண் "

தமிழ் கற்க விரும்பினார். அவர் ஒரு வெண்பாவைப் பாடி அதனைத் தம்பிரானுக்கு அனுப்பினார். தம்பிரான் அப்பாவினைப் படித்து, முதலியாரது தமிழ்ப் பற்றுக்கு மகிழ்ந்து, அவருக்குத் தமிழ் கற்பிக்க இசைந்தார். முதலியார் அன்று முதல் அப்பெரியாரிடம் மிக்க பயபக்தியுடன் நடந்து, பல தமிழ் நூல்களைப் பாடம் கேட்கலானார். அவர் பச்சையப்பன் பள்ளியில் படித்துக்கொண்டே இராமலிங்கத் தம்பிரானிடம் தமிழ் நூல்களைக் கற்றுவந்தார், கவிபாடி வந்தார் என்பவற்றை நீங்கள் மறத்தலாகாது. முதலியார் சைவசமய நூல்களையும் விருப்பத்துடன் படித்தார்.

## இராமலிங்க அடிகளைக் காணுதல்

'திரு அருட்பா' பாடிய இராமலிங்க அடிகள் அக்காலத்தில் வாழ்ந்தவராவர். அவர் வடலூரில் ஒரு கோவிலைக் கட்டி அங்கு எழுந்தருளியிருந்தார். அவருடைய அருட்பாடல்களைப் படித்த இளைஞராகிய முதலியார் அவ்வடிகளைக் காண விரும்பினார்; பெரு விருப்பத்துடன் வடலூர் சென்றார்; அடிகளைக் கண்டு பணிந்தார். அடிகள் அவரை ஆசீர்வதித்து, அவருடன் உரையாடினார்; இளமையில் அவர் அடைந்திருந்த புலமையைக் கண்டு மகிழ்ந்து, எதிர் காலத்தில் பெரும் புலவராகத் திகழுமாறு ஆசிர்வதித்தார். அப்பெரியாரது நல்லாசி பெற்ற முதலியார் சென்னையை அடைந்தார்.

## பிள்ளையவர்களின் ஆசி பெறுதல்

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சென்னையில் வந்து தங்கியிருந்தார்கள். முதலியார் அப்பெரும் புலவரைப் பற்றி நன்ருய்க் கேள்விப்பட்டிருந்தவர் ஆதலால், ஒரு வெண்பாவினை அவருக்கனுப்பி அவரது ஆசியைப் பெற விரும்பினுர் ; அவ்வாறே ஒரு வெண்பாவைப் பாடி அனுப்பினுர். சேயின் திருமுகத்தைக் கண்டு மனமகிழ்ச்சி கொள்ளும் தாய்போலப் பிள்ளையவர்கள் முகம், முதலியார் அவர்களின் திருமுகத்தைக் கண்டு மலர்ந்தது. அவர் ஒரு வெண்பா[3]வில் தமது ஆசீர்வாதத்தை வைத்து அனுப்பினுர். மகாவித்துவான் பாராட்டுத் தமக்குக் கிடைத்ததை எண்ணி எண்ணி, முதலியார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

## புதிய தமிழாசிரியர்

முதலியார் 1875-ஆம் ஆண்டில் செங்கற்பட்டுக்குச் சென்ருர். அங்குப் பேறை—தசாவதானம் ஜகந்நாதப் பிள்ளை என்பவர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராக இருந்தார். முதலியார் அவரிடம் மாணவராகச் சேர்ந்து, இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் பாடங்கேட்டார் ; அவதானம் செய்யவும் பழகிக்கொண்டார்.

3 '' கலியாண சுந்தரவென் கண்மணியே நின்பால்
மலிவாகக் கல்வி வளரும்—பொலிவாகப்
பொற்புவியிற் கற்ருேர் புகழச் சிவஞான
விற்பனனுய் வாழ்ந்திருக்க வே.''

1876-இல் சென்னையிலிருந்து செங்கற்பட்டுக்கு முதன் முதல் புகைவண்டி விடப்பட்டது. அதைக் கண்ட மக்கள் அடைந்த வியப்புக்கு அளவில்லை. அப் புகைவண்டியை வியந்து ஆசிரியர் ஜகந்நாதப் பிள்ளை,

> "பாருங்கள் ஓர்நொடியில் பன்னுமிடம் போய்வரலாம்
> வாருங்கள் என்னதடை மாநிலத்தீர்"—

என்று ஒரு வெண்பாவின் முதலிரண்டடிகளைப் பாடினர். உடனே அவர் மாணவராகிய முதலியார், —"நீருங்கள்

> காலால் நடவாமல் காசுமிக நல்காமல்
> மேலாக வாழவினி மேல்"

என்று கடைசி இரண்டு அடிகளைத் தாமே பாடி வெண்பாவை முடித்தார். ஆசிரியர் மிக்க மகிழ்ச்சி அடைந்து மாணவரைப் பாராட்டினர்.

## 'அஷ்டாவதானம்' என்னும் பட்டம்

அவதானம் என்பது ஒரு சபையில், பல புலவர்கள் ஒரே காலத்தில் பலவகைப் பொருள்களை வைத்துக் கவி பாடும்படி கேட்பார்கள்; வேறு பல விஷயங்கள் பற்றியும் கேள்விகள் கேட்பார்கள். அவை அனைத்தையுங் கேட்டுக்கொண்டு, பிறகு ஒவ்வொன்றாக விடைகூற வேண்டும். இவ்வாறு கூறி வெற்றி பெறுபவர் **அவதானி** எனப்படுவார். அவர், கல்வி காரணமாக எத்தகைய பொருளைக் கேட்டாலும் பதில் கூறவேண்டும். ஒரே சமயத்தில் எண்வகைக் கேள்விகளுக்கு பதில் கூறும் புலவர் **அஷ்டாவதானி** என்ற பட்டம் பெறுவார். பத்துக் கேள்விகட்குப்

பதில் கூறுபவர் தசாவதானி என்னும் பட்டம் பெறுவர். ஒரே சமயத்தில் நூறு கேள்விகட்குப் பதில் கூறி வெற்றி பெறுபவர் சதாவதானி என்னும் பட்டம் பெறுவர்.

நமது முதலியார் அஷ்டாவதானி என்னும் பட்டம் பெற விரும்பினர். ஆதலால் அவர் 1878-ஆம் ஆண்டில் திருக்கழுக்குன்றத்தில் புலவர் பேரவை கூட்டினர். அந்த அவைக்குத் தசாவதானம்—ஜகந் நாதப் பிள்ளை தலைமை தாங்கினர். அவர் முன் னிலையில் புலவர்கள் முதலியாரைப் பலவகைப் பாக்கள் பாடும்படி கேட்டனர். முதலியார் அவ்வாறே அவர்கள் கொடுத்த பொருள்களை வைத்துச் சொல் லழகும் பொருளழகும் உள்ள பாக்களைப் பாடித் தேர்வில் வெற்றி பெற்றார்; அதுமுதல் அவர் அஷ்டாவதானம்—கலியாணசுந்தர முதலியார் என்று நாட்டில் வழங்கப்பட்டார்.

## 2. முதலியாரிடம் பாடம் கேட்டவர்

### திருமணம்

அஷ்டாவதானம் செய்த மறு ஆண்டில் முதலியாருக்குத் திருமணம் நிகழ்ந்தது. மேடவாக்கம் வேங்கடாசல முதலியார் மகளாரை முதலியார் மணந்துகொண்டார். அவர் இல்வாழ்க்கை செவ்வனே நடைபெற்றது அவர்கட்குப் பிறந்த பெண் குழந்தைக்குச் சிவஞானாம் என்று பெயர் சூட்டப் பட்டது. அவர் மனைவியார் இல்லறக் கடமைகளை நன்கு உணர்ந்தவராதலால் முதலியாரது வருவாய்க்கு ஏற்றவாறு செலவு செய்து, கணவர் மகிழும்படி நடந்து, இல்லற வாழ்க்கையை இன்ப வாழ்க்கை ஆக்கினர்; "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்னும் பெரியோர் வாக்கை மெய்ப்பித்தார். இவ்வாறு அம்மையாரது உயர் பண்பினல் இல்லறம் இனிமையாக நடைபெற்று வந்ததால், முதலியார் தாம் பார்த்துவந்த அரசாங்க குமாஸ்தா வேலைநேரம் போக எஞ்சிய நேரங்களில் மாணவர் பலருக்குத் தமிழ்ப்பாடம் கற்பிப்பதும், சைவ சமயச் சொற்பொழிவுகள் செய்வதுமாக இருந்தார்.

### முதலியாரது சென்னை வாழ்க்கை

முதலியார் 1882-இல் சென்னையிற் குடியேறினர்; தமது மைத்துனரது வாணிகச்சாலையில் அலுவலை ஏற்றர். ஆயினும் அவருக்கு அந்த அலுவலில் இருக்க விருப்பமில்லை. அவர் சொற்பொழிவு செய்தல்,

மாணவர்க்குப் பாடம் கற்பித்தல், நூல்கள் வரைதல் ஆகியவற்றையே பெரிதும் விரும்பினர். முதலியார் சென்னை நகரத்தில் செய்த சைவச் சொற்பொழிவுகள் மிகப் பலவாகும். அவர் செய்த தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகளும் பலவாகும். அவற்றில் ஈடுபட்ட பொது மக்கள் அவரைச் சிறப்பிக்கலாயினர்; மாணவர் பலர் தோன்றினர். அவர் மாணவர்களுக்கு இலக்கணமும் இலக்கியமும் சைவசமய நூல்களும் கற்பித்துவந்தார். இங்ஙனம் அவரிடம் பல நூல்களைப் பாடங்கேட்டுத் தமிழ் அறிவு பெற்றோர் பலர்.

## மாணவர்கள்

அவர் மாணவர்களிடம் அன்புடன் உரையாடும் இயல்புடையவர். அவரிடம் பெண் மக்களும் கல்வி பயின்றனர். அவர் இருபால் மாணவரையும் மிக்க அன்போடு 'அம்மா' என்று அழைக்கும் இயல்புடையவர். அவர் வீட்டில் எப்பொழுதும் மாணவர் ஒருவர் அல்லது இருவர் இருந்துகொண்டே இருப்பர். முதலியார் முதலில் செய்யுள் இலக்கணத்தைத்தான் நன்கு கற்பிப்பார். தம் மாணவரனைவரும் பாக்களைப் பாடிப் புகழ்பெற வேண்டுமென்பதே அதற்குக் காரணம். அவர் அவர்களைப் பல பாடல்கள் பாடும்படி அடிக்கடித் தூண்டுவார்; அவர்கள் பாடிய பாக்களைப் பாராட்டி அவர்தம் மனத்தை மகிழச் செய்வார். அவருடைய மாணவர் பலருள் மோசூர்—கந்தசாமி முதலியார், வல்லை—சண்முகசுந்தர முதலியார், புழலை—திருநாவுக்கரசு முதலியார், மணி—திருநாவுக்

கரசு முதலியார் என்பவர் சிறப்பாகக் குறிக்கத் தக்கவராவர்.

மேற்சொன்ன மாணவருள் மோசூர்—கந்தசாமி முதலியார் பி. ஏ. பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் இருந்தவர்; சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பிற பல்கலைக்கழகங்களிலும் தமிழ்க் குழுக்களில் உறுப்பினராயிருந்து தமிழ்த் தொண்டு ஆற்றியவர். கந்தசாமி முதலியாருடன் பச்சையப்பன் கல்லூரியிலேயே தமிழ் விரிவுரையாளராக இருந்து வேலை பார்த்தவர் மணி—திருநாவுக்கரசு முதலியார். இவர் மறைமலை அடிகளிடம் பாடங்கற்றுப் பெரும் புலமை அடைந்தவர்; பள்ளிக்கூட நூல்களை எழுதியவர்; செந்தமிழ்ச் செல்வி முதலிய சிறந்த திங்கள் வாரத் தாள்களை நடத்தியவர். தமிழிலக்கியம் பற்றியும் சைவசமயம் பற்றியும் அரிய கட்டுரைகள் எழுதியவர்; சொற்பொழிவுகள் பல ஆற்றியவர். வல்லை-சண்முகசுந்தர முதலியார் என்பவர் தமிழிலும் மருத்துவத்திலும் பெயர் பெற்ற புலவர். இங்ஙனம் நமது முதலியார் மாணவர்கள் நாட்டில் சிறப்புற்ற தமிழ்ப் புலவர்களாகவே பிற்காலத்தில் விளங்கினர்.

## முதலியாரிடம் கற்ற மாணவிகள்

மாணவரைப் போலவே மாணவிகள் பலரும் முதலியாரிடம் தமிழ்க் கல்வியும் சமயக் கல்வியும் பல ஆண்டுகள் கற்றனர். அவர்கள் இல்லற வாழ்க்கையில் இருந்துகொண்டே தாய் மொழிப் பற்றினால் தமிழ் நூல்களை நன்கு கற்றனர்.

அப்பெண்மணிகளுள் குறிப்பிடத்தக்கவர் நாராயணி அம்மையார், மனோன்மணி அம்மையார், அகிலாண்டநாயகி அம்மையார் என்பவர் ஆவர். நாராயணி அம்மையார் நமது முதலியாரிடம் தமிழ் பயின்று, சென்னை இராயபுரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பல ஆண்டுகள் தமிழ் ஆசிரியராக வேலை பார்த்தனர். இந்த அம்மையார் தமிழிலும் சைவத்திலும் மிகுந்த பற்றுடையவர் ; சிறந்த பேச்சாளர். இவர் ஆறாண்டுகட்கு முன் காலமானார்.

மனோன்மணி அம்மையார் தமிழில் ஓரளவு புலமை பெற்ற பிறகே மேலும் சில நூல்களைப் படிக்க முதலியாரிடம் வந்தவர். இந்த அம்மையார் செய்யுள் நூல்கள் செய்வதில் மிகச் சிறந்தவர் ; மருத்துவத்திலும் நல்ல பழக்கமுடையவர் ; மனோன்மணீயம் என்றும் மருத்துவ நூலை எழுதிய பெருமையுடையவர். இவரது வரலாறு இந்நூலில் அடுத்த பகுதியாக வருதலால் ஈண்டு மிகுதியும் கூறவேண்டுவதில்லை.

அகிலாண்டநாயகி அம்மையார் முன் சொன்ன மனோன்மணி அம்மையாருடைய தமையன் மகளார் ; இந்த அம்மையாரும் சில ஆண்டுகள் முதலியாரிடம் தமிழ் நூல்களைக் கற்றனர் ; செய்யுள் செய்யவும் அறிந்தனர் ; முதலியாரிடம் படித்த பெண் மணிகளுள் இவர் ஒருவரே இப்பொழுது உயிருடன் இருப்பவர். இவர் செங்கற்பட்டை அடுத்த மையூர் என்னும் சிற்றூரில் தொடக்கநிலைப் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து ஓய்வு பெற்றிருக்கிறார்.

## 3. தமிழ்ப்பணியும் நற்பண்புகளும்

### "சித்தாந்தம்" ஆசிரியர்

முதலியார் காலத்தில் தமிழ் நாட்டில் சிறந்த சைவப்பெரியார் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் பெயர் நல்லசாமிப் பிள்ளை என்பது. அவர் ஜில்லா முனிசீப்பாக வேலைபார்த்தவர்; சைவ சமய உண்மைகளை உலகத்திற் பரப்ப எண்ணித் தமிழிலும் ஆங்கிலத்திலும் பத்திரிகைகளை நடத்தினர். அப் பெரியார் நமது முதலியாரிடம் மிக்க மதிப்புடையவர். அவர், சென்னையில் 1918-ஆம் ஆண்டில் தோன்றிய சித்தாந்தம் என்னும் மாதத்தாளுக்கு நமது முதலி ஆசிரியராக நியமித்தார். முதலியார் தமது எழுத் தாற்றலை அப்பத்திரிகையில் நன்கு விளக்கிப் புகழ் பெற்றார்.

### நூலாசிரியர்

முதலியார் தம் காலத்தில் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் மிகச் சிறந்தது திருவாண்மியூர்ப் புராணம். அந் நூலின் செய்யுட்களில் உள்ள வருணனைகள், உவமைகள், அரியதொடர்கள் படிப் போர்க்கு இன்பத்தைத் தருவன. முதலியார் எழுதிய பிற நூல்களில் குறிப்பிடத்தக்கவை சில உண்டு. அவை அவர் வரலாற்று இறுதியில் தரப்படும்.

### துறவுக்கோலம்

முதலியாருக்கு இரண்டு பெண்மக்களும் ஒரு மைந்தனும் பிறந்து வளர்ந்தனர். எனினும், அவர்கள்

நீண்ட நாள் இவ்வுலகில் வாழவில்லை. முதலியார் நாற்பது வயதுக்கு மேற்பட்டவராக இருந்தபொழுது, அவருடைய மனைவியாரும் மூன்று மக்களும் ஒருவர் பின் ஒருவராகக் காலமாயினர். அதனால் முதலியாருக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டது. அவரது உள்ளம் கடவுளையே நாடி இருந்ததால், அவர் துறவுக்கோலத்தை மேற்கொண்டார். அது முதல் அவர் கலியாணசுந்தர யதீந்திரர் என்று அழைக்கப்பட்டார்.

## முதலியார் மறைவு

நமது முதலியார் துறவுக்கோலம் பூண்ட பிறகு காஞ்சி முதலிய பல இடங்களுக்கும் சென்று சைவ சமயச் சொற்பொழிவுகளைத் திறம்படச் செய்து வந்தார்; பலருக்குத் தமிழ் நூல்களைக் கற்பித்து வந்தார்; பல செய்யுள் நூல்களை இயற்றிவந்தார்; இங்ஙனம் தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் செய்துவந்த அப் பெரியார் தமது 65-ஆம் வயதில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

## முதலியாரின் நற்பண்புகள்

அஷ்டாவதானம்—பூவிருந்தவல்லி—(பூவை) கலியாணசுந்தர முதலியார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சென்னையிலும் பிற இடங்களிலும் தமிழ்த்தொண்டு புரிந்தபெரியார்களுள்சிறந்தவராவர். அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர். அம்மாணவர்களுக்கு மாணவர் பலர். அவ்வாறே நாராயணி

அம்மையார் போன்ற மாணவிகளுக்கு மாணவிகள் பலராவர். முதலியார் ஒருவரது தொண்டிலிருந்து பிறக்கும் தமிழறிஞர் எத்துணையர் என்பதை எண்ணிப் பாருங்கள். பிறர்க்குப் பாடம் கற்பித்தலை விடச் சிறந்த கல்வித் தொண்டு வேறில்லை என்பது அறிஞர் கருத்து. அக்கருத்தின் பொருளை நன் குணர்ந்து தமிழாசிரியர் பலரை உற்பத்தி செய்த முதலியாருக்கு நமது வணக்கம் உரியதாகுக.

## முதலியார் ஏழை பங்காளர்

முதலியார் தம்மிடம் சிறிது பொருள் இருப்பினும் தம் உதவியை நாடியவர்க்கு உடனே கொடுத்துவிடும் இயல்பினர்; தம் மாணவர்களைத் தம்மோடு ஒப்ப நடத்தி இன்பங் கண்ட ஆசிரியர் இவர் ஒருவரே என்று அறிஞர் கூறுவர். முதலியார் சைவ சமயத் தில் அழுத்தமான பற்றுள்ளவர்; அதற்காகத் தமது உடல் நலத்தையும் கவனியாமல் பல ஊர்களுக்கும் சென்று சமயச் சொற்பொழிவுகள் செய்தவர்; மக்கள் தம் தாய் மொழியாகிய தமிழை நன்கு கற்கவேண்டும்; பிழையறப் பேசவேண்டும்; பிழையற எழுத வேண் டும் என்று ஒவ்வொரு கூட்டத்திலும் அறிவுறுத்தி வந்த பெரியார்.

## நிலைத்த புகழ்

முதலியார் பல வசன நூல்களையும் செய்யுள் நூல்களையும் எழுதினர்; பலரைத் தமிழாசிரியர்கள் ஆக்கினர்; பெண்களும் புலமை பெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் அவர்களைப் புலவர்கள்

ஆக்கினர் ; அவர்களால் அங்காங்குத் தமிழ்ப் பணி நிகழச் செய்தார் ; தாமும் பல ஊர்கட்குச் சென்று கணக்கற்ற சொற்பொழிவுகள் ஆற்றி மக்களுக்குத் தமிழ்ப் பற்றையும் சமயப் பற்றையும் வளர்த்தார். இத்தகைய அரிய தொண்டுகளால் முதலியார் இந் நாட்டில் நிலைத்த புகழை எய்தினர். அவரது திருப் பெயர் என்றும் நிலவுக !

முதலியார் இயற்றிய நூல்களுட் சில *

1. திருவான்மியூர்ப் புராணம்
2. திருப்பாசூர்ப் புராண வசனம்
3. திருவலிதாயப் புராண வசனம்
4. திருவேற்காட்டுப் புராண வசனம்
5. திருவொற்றியூர்ப் புராண வசனம்
6. சீகாளத்திப் புராண வசனம்
7. சேக்கிழார் சுவாமிகள் வரலாறு
8. ஏகாம்பரேசர் பதிகம்
9. காமாட்சி அம்மன் பதிகம்
10. சுந்தர விநாயகர் பதிகம்
11. கற்பக விநாயகர் பதிகம்
12. திருமுல்லைவாயில் மாசிலாமணி ஈசர் பதிகம்

முதலியன.

* மாணவர் இவற்றைப் பெயரளவில் தெரிந்திருத்தல் சாலும்



வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

# II. வெ. ப. சுப்பிரமணிய முதலியார்
(1857—1946)

## 1. முதலியாரது வாழ்க்கை வரலாறு

முன்னுரை

சங்க காலத்தில் பெரும்பாலான தமிழ் மக்கள் கல்வி அறிவு பெற்றிருந்தனர். பிற்காலத்தில் வேற்றரசர் ஆட்சியில் கல்விப் பயிற்சி குறைந்தது. அதனால் எல்லோரும் தாய்மொழியில் நல்ல பயிற்சி பெறக் கூடவில்லை. அக்காலமுதல் இன்றுவரை தமிழ் பெரும்பாலும் தமிழ்ப் புலவர்களிடமே ஒப்படைக்கப் பட்டுவிட்டது. சங்ககாலத்தில் மருத்துவன் தாமோதரனர் இருந்தாற்போலவும் கூலவாணிகன் சாத்தனர் இருந்தாற்போலவும் இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் தமிழ்ப் புலவர் அல்லாத பிற தொழில் அறிஞரும் தமிழறிவு பெற்றிருந்தனர்; இப்பொழுதும் பெற்றுள்ளனர். ஆனல் இவர் தொகை மிகவும் சிறியது.

இவ்வாறு பிற தொழில் செய்துகொண்டே தமிழிற் புலமை பெற்ற அறிஞர்கள் ஒவ்வொரு நூற்றுண்டிலும் இருந்திருக்கின்றனர். அவருள் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் என்பவர் ஒருவர். அவர் கால்நடை மருத்துவத் துறையில் அலுவல் பார்த்தவர்; பிறவிச் செல்வர்; தளவாய் அரிய நாத முதலியார் பரம்பரையினர். அவர், செல்வச் சிறப்

பும் பிறதுறை அலுவலும் இருந்தும் தமிழன் தன் தாய்மொழியில் ஓரளவேனும் அறிவு பெறுதல் வேண்டும் என்னும் பொதுக் கொள்கைக்கு ஏற்பப் புலவர்களிடம் கல்வி பயின்று கவிபாடும் ஆற்றலும் பொருள் விவரிக்கும் திறமையும் அழகிய உரைநடை எழுதும் பயிற்சியும் பெற்றார். அவர் 1916-இல் காலமானார். ஆயினும் அவர் தம் ஆயுட்காலத்தில் தமிழுக்குச் செய்த சேவை பெரிதும் பாராட்டத் தக்கது. சென்னைப் பல்கலைக் கழகம் போன்ற கல்வி நிலையங்களும் அவரது தமிழ்த் தொண்டினைச் சிறப்பித்தன எனின், அப்பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றையும் அவர் செய்த தமிழ்த் தொண்டையும் நாம் அறிந்துகொள்வது தவறாகாது அன்றோ?

## பழநியப்ப முதலியார்

தளவாய் அரியநாதர் தொண்டை நாட்டு வேளாளர். அவர் தம் இனத்தவரை மதுரை மாவட்டத்தின் வளம் மிகுந்த சோழவந்தான் என்னும் ஊரில் குடியேற்றினார். அங்கு வாழ்ந்த குடும்பங்களுள் சில திருநெல்வேலியில் குடியேறின. அவற்றுள் ஒன்று பழநியப்ப முதலியார் குடும்பம். பழநியப்ப முதலியார் திருநெல்வேலிச் சீமையை ஆண்ட தளவாய் முதலியார் குடும்பத்தாருக்கு நெருங்கிய உறவினர்; பெண் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்ட நெருங்கிய உறவினர். அவர் தளவாய் எஸ்டேட்டுக்கு மானேஜராக இருந்து, அதனைப் பல துறைகளிலும் முன்னுக்குக் கொணர்ந்தனர். அவர் திருநெல்வேலியை அடுத்

துள்ள வெள்ளகால் என்னும் இடத்தில் வாழ்ந்து வந்தார். அப்பெரியார் அச்சிற்றூருக்குச் செய்த நன்மைகள் பல.

## சுப்பிரமணிய முதலியார் கல்வி கற்றல்

பழநியப்ப முதலியாரின் முதல் மைந்தரே நமது வெ. ப. சுப்பிரமணிய முதலியார். இவரை இந்நூல் முழுதும் முதலியார் என்றே நாம் அழைப்போம். முதலியார் 1857-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14-ஆம் நாள் பிறந்தவர்; ஐந்து வயது வரையில் வெள்ளகால் என்னும் சிற்றூரில் வளர்ந்தார்; பிறகு படிப்பைக் கருதித் திருநெல்வேலிக்கு வந்தார், தம் அத்தை கணவர் மேடை தளவாய் குமரசாமி முதலியாரது அரண்மனையில் தங்கினார், தெற்குப் பொதுத் தெருவில் இருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். அப்பள்ளிக்கு ஆசிரியராக இருந்தவர் சிறந்த தமிழறிஞர்; அழகிய சொக்கநாதப் பிள்ளை என்ற பெரும் புலவரின் சிறிய தந்தையார். நமது முதலியார் அப்பெரியாரிடம் நான்காண்டுகள் படித்தார், பிறகு மிஷன் பள்ளிக்கூடத்தில் தமிழும் ஆங்கிலமும் சேர்ந்து படிக்கலானார். பிறகு முதலியார் இந்து கலாசாலையில் சேர்ந்து படித்தார்; 1876 இல் நடந்த மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சியுற்று, பின்னர் முன்னாள் அமைச்சர் சர். சிவஞானம் பிள்ளை அவர்களுடன் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து படித்தார்; உடல்நலக் குறைவால் கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டார்.

**பயிர்த்தொழிற் கல்வி**

கல்லூரிப் படிப்பை விட்ட முதலியார் சென்னையில் திறக்கப்பட்ட பயிர்த்தொழிற் கல்லூரியில் 1880-இல் மாணவராகச் சேர்ந்தார்; அப்பள்ளியில் நான்காண்டுகள் படித்து 'பயிர்த்தொழில்' அறிஞர் என்று பட்டம் பெற்றார்.

**கால்நடை மருத்துவ இலாக்கா**

முதலியார் பயிர்த்தொழில் தேர்வில் பட்டம் பெற்ற பிறகு, கால்நடை மருத்துவ இலாகாவில் பதவி யேற்றார். முதலியார் 1884 முதல் 1890 வரை அந்த இலாக்காவில் உத்தியோகம் பார்த்தார்; பிறகு சென்னை ரெவினியூ போர்டு அலுவலகத்தில் வேலை பார்க்கலானார். அப்புதிய இலாக்காவுக்கு வேண்டிய தேர்வுகளிலெல்லாம் தேர்ச்சி பெற்றார். ஆனால் இதற்கிடையில் மீண்டும் கால்நடை மருத்துவத்தில் விருப்பம் ஏற்பட, அவர் பம்பாய் சென்று ஓராண்டு படித்துப் பட்டம் பெற்றார். தேர்வில் முதல்வராகத் தேறினமையால் பதக்கமும் பெற்றார். முதலியார் அவ்வேலையில் 1895 முதல் 1911 வரையில் 100 ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்தார். பிறகு 200 முதல் 400 வரை மாதச் சம்பளம் வரத்தக்க உயர் பதவி அவருக்குக் கிடைத்தது. பின்னர், நான்காண்டுகள் வேலை பார்த்து, 1915-இல் ஓய்வு பெற்றார்; மேலும் முப்பத்தோராண்டுகள் பலவகைப் பணிகளில் ஈடுபட்டிருந்து, 12–10–1946-இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## குடும்ப வாழ்க்கை

முதலியாருக்கு 1880-இல் திருமணம் நடந்தது. வேலம்மாள் அண்ணி என்னும் பெயர் கொண்ட அவ்வம்மையார் தம் கணவர் குறிப்பு அறிந்து நடக்கும் தன்மை பெற்றவர். ஆதலால் அவர்களது வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இருந்தது. அவ்வம்மையார் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்று 1899-இல் காலமானார். முதலியாருடைய முதல் மகளார் ஆள்வார்குறிச்சி என்னும் ஊரில் மணம் செய்துகொடுக்கப்பட்டார். இரண்டாம் மகளார் திருநெல்வேலி மேடை தளவாய் அரங்கநாத முதலியாரை மணந்துகொண்டார். முதலியார் 1900-ஆம் ஆண்டில் வடிவம்மாள் அண்ணி என்பவரை இரண்டாம் மனைவியாராக ஏற்று மணந்து கொண்டார். அந்த அம்மையார்க்குப் பிறந்த செல்லம்மாள் அண்ணி மேடை தளவாய் குமாரசாமி முதலியாரை மணந்துகொண்டார். முதலியாருடைய ஆண்மக்கள் இருவருள் மூத்தவர் V. S. பழநியப்ப முதலியார் என்பவர். அவர் B. A. பட்டம் பெற்றவர்; இங்கிலாந்து சென்று வேறு பல பட்டங்களும் பெற்றவர். ஆனால் அரசாங்க அலுவலுக்குச் செல்லாமல் குடும்ப அலுவல்களைக் கவனித்து வருகின்றார். இளைய குமாரர் தீத்தாரப்ப முதலியார் மேடை தளவாய்க் குடும்பத்தில் மணம் செய்து கொண்டு இன்ப வாழ்க்கை வாழ்கின்றார்.

## 2. முதலியாரும் தமிழ்ப் பயிற்சியும்

### தமிழில் ஆர்வம்

முதலியார் தளவாய் அரண்மனையில் இருந்து பள்ளியில் வாசித்துக்கொண்டிருந்தபோது அரண்மனையில் அவ்வப்போது படிக்கப்பட்டுவந்த தமிழ் நூல்கள் பலவற்றை அருகிருந்து கேட்டுப் பொருள் உணர்ந்தார்; பிறகு தாமாகவே அவற்றைப் படித்து இன்புற்றார். அவர் அப்பயிற்சியின் உதவிகொண்டு வேறு பல நூல்களைத் தாமாகவே பயின்றார். பிறகு முதலியாருக்கு அழகிய சொக்கநாதப் பிள்ளையின் நட்புக் கிடைத்தது. அக்காலத்தில் திருநெல்வேலியில் தமிழ் வளர்த்த வள்ளல் முத்துசாமிப் பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மாளிகையில் புலவர் பலர் நாள்தோறும் கூடிக் கவிபாடிக்கொண்டும் நூல்களைப் படித்துக்கொண்டும் இருந்தார்கள். முதலியார் தமது பள்ளிக்கூட நேரம் போக எஞ்சிய நேரத்தை அப்புலவர் பெருமக்களுடன் கழித்தார்; பாரதம், திருவிளையாடற் புராணம், குற்றாலத் தலபுராணம், கலிங்கத்துப் பரணி, நைடதம், நளவெண்பா முதலிய நூல்களை அப்புலவர்களிடமிருந்து பாடங் கேட்டார். இத்தகைய நற்பழக்கத்தால் முதலியார் தமது இருபது வயதிற்குள் சிறந்த தமிழ் நூல்களையெல்லாம் நன்கு படித்து முடித்தார்; முடித்த பிறகு, நன்னூல், இலக்கணக் கொத்து முதலிய இலக்கண நூல்களைப் படிக்கலானார்.

ஊற்றுமலை ஜமீன்தாரான இருதாலய மருதப்பத்தேவர் நமது முதலியார் வீட்டிற்கு வேண்டியவர்.

அவர் சிறந்த வள்ளல். தமிழ்ப் புலவர்கள் தினந் தோறும் அவரிடமும் செல்வதுண்டு. அங்ஙனம் செல்லும் புலவர்களுடன் நமது முதலியாரும் ஊற்று மலை சென்று, சில நாள் தங்கிப் புலவர்களுடைய பாடல்களைக் கேட்டு அனுபவித்துவந்தார்.

அறிஞர் நட்பு

தமிழிற் பெரும் புலவராக விளங்கிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களை முதலியார் ஏறத் தாழ அறுபதாண்டுகளாக நன்கறிவார். அவர் கும்பகோணத்திலிருந்தபோதே முதலியார் அவருடன் பழகி நட்புக் கொண்டார். அவர் அவ்வப்போது அச்சிட்டு வெளிப்படுத்திய தமிழ் நூல்களை யெல்லாம் வாங்கிப் படித்து இன்புற்றார். சிறந்த புலவர்களாகிய அழகிய சொக்கநாதப் பிள்ளையும், திருக்குறள் வசனம், சிவகாசி தலபுராணம், சிவகாசி அந்தாதி முதலிய நூல்களைச் செய்த மு. ரா. அருணசலக் கவிராயரும் முதலியாரது தமிழறிவிற்கு ஓரளவு காரணராவர். பேரறிஞராக விளங்கிய சென்னை மாகாணக் கல்லூரிப் பேராசிரியர் பூண்டி அரங்கநாத முதலியார் செய்த தமிழ்ச் சொற்பொழிவுகளும் முதலியாருக்குத் தமிழில் ஊக்கத்தை உண்டாக்கின. முதலியார் பூண்டி அரங்க நாத முதலியாரை நேரிற் கண்டு பேசித் தமது தமி ழறிவைப் புலப்படுத்தினார். அவ்வாறே சுவர்க்க நீக்கம் என்னும் தமிழ்ச் செய்யுள் நூலைப் படித்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் மிகவும் பாராட்டிக் கடிதங்கள் வரைந்தனர்.

## 3. முதலியார் செய்த தமிழ்ப்பணி

### தேவையான புதிய நூல்கள்

அரசாங்க அலுவலில் ஈடுபட்டுள்ள தமிழர்கள் தத்தம் இலாக்காக்களைப் பற்றிய விவரங்களைத் தம் தாய்மொழியில் வரைந்து வெளிப்படுத்தினால், அத் தொண்டு நாட்டு மக்களுக்குப் பயன்படும் அல்லவா? அந்தத் துறையில் இரண்டொருவரே இது வரை உழைத்துள்ளனர். அவருள் நமது முதலியார் ஒருவர். இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புத்தகம் என்னும் ஆங்கில நூல் கால்நடை மருத்துவம் பற்றிய விவரங்களைத் தெளிவாக வெளியிடுவது. முதலியார் அந்நூலைத் தமிழில் மொழி பெயர்த்தார். அரசாங்கத்தார் அவரது முயற்சியைப் பாராட்டி அதனைத் தங்கள் செலவில் அச்சிட்டு வெளிப் படுத்தினர். அம் மொழிபெயர்ப்பைப் பற்றி அதன் முதல் நூல் (ஆங்கில நூல்) ஆசிரியரான ஆங்கிலேயர் மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளார்; ஆசிரியருடைய மொழிபெயர்க்கும் பொறுமையையும் திறமையையும் பாராட்டியுள்ளார். பல ஆண்டுகட்குப் பிறகு, முதலியார், 'இந்தியாவில் கால்நடைகளுக்குக் காண்கிற உயிரழிப்பு நோய்கள்' என்னும் ஆங்கில நூலை மொழிபெயர்த்தார். அதனையும் அரசாங்கத் தாரே வெளியிட்டனர். பிறகு முதலியார் தமது அநுபவத்தின் உதவியால் 'கால்நடைகளுக்கு அம்மை குத்தலும் அதன் பயன்களும்' என்ற பொருள் கொண்ட சிறு நூலை எழுதி வெளியிட்டார். இம்

மூன்று நூல்களும் நம் நாட்டுக் குடியானவர்க்கே சிறப்பாக உரியவை. ஆதலால் முதலியார் அவற்றை மிக எளிட நடையில் எழுதியுள்ளார்.

## முதலியார் தமிழ்ப் பணி

இறவாத புகழுடைய பல நாட்டு நூல்களையும் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்பது அனைவர்க்கும் உடன்பாடுதானே! அப்பொது நிலையில் இருந்து நமது முதலியார் ஆங்கிலப் பெரும்புலவரான மில்ட்டன் எழுதிய சுவர்க்க நீக்கம்—முதற் காண்டத்தைத் தமிழ்க் காவியமாகப் பாடியுள்ளார்; ஆங்கிலப் பேராசிரியரான ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் எழுதிய கல்வி விளக்கம்—முதற் பகுதியை மொழி பெயர்த்தனர்.

## அகலிகை வெண்பா

அகலிகையின் வரலாறு கூறும் இந்நூல் வெண்பாவில் அமைந்தது; பாடல்கள் மிக்க சுவையுள்ளவை. முதலியார் ஷேக்ஸ்பியர் முதலிய ஆங்கிலக் கவிகளின் பல கருத்துக்களை இந்த வரலாற்றில் புகுத்திப் பாடியுள்ளார்.

## கோம்பி விருத்தம்

கோம்பி—பச்சோந்தி. பச்சோந்தியை விஷயமாகக் கொண்டு நகைச் சுவைத் தோன்ற எழுதப்பட்ட ஆங்கிலப் பாடல் ஒன்றை நமது முதலியார் வாசித்தார்; அதனைத் தழுவித் தமிழிலும் ஒன்று பாட எண்ணினர்; புதிய விஷயங்கள் பலவற்றைச்

சேர்த்தார்; கோம்பி விருத்தம் என்று பெயர் கொடுத்து ஒரு நூலாகக் கொணர்ந்தார். பச்சோந்தியின் கதை படிக்கப் படிக்க இன்பம் பயப்பதாகும்.

## நெல்லைச் சிலேடை வெண்பா

நெல்லை என்பது திருநெல்வேலி. சிலேடை என்பது ஒரு சொல்லுக்கு அல்லது தொடருக்கு இரு பொருள் காண்பது. வெண்பாவின் முன்பாதியில் திருநெல்வேலியைச் சிலேடை வகையால் சிறப்பித்தும், அத்தலத்தில் உள்ள சிவபெருமானைப் பிற்பாதியில் சிறப்பித்தும் பாடப்பெற்ற நூறு வெண்பாக்களைக் கொண்டது இந்நூல். இந்நூலைப் பாராட்டிப் புலவர் பலர் பத்திரிகைகளில் கட்டுரைகள் வரைந்தனர்; முதலியாரை வாழ்த்தினர்.

## சர்வஜன ஜெபம்

இதுதான் முதலியார் எழுதிய நூல்களில் மிகச்சிறியது; ஆயின் பொருள் மிகப் பெரியது. உலகிலுள்ள எல்லா வகையான மக்களும் ஏற்றுக்கொண்டு இறைவனை நோக்கிச் செய்யத்தக்க பிரார்த்தனை இந்நூலில் செய்யுள் வடிவாகப் பாடப்பட்டுள்ளது. இந்நூற்பாடலைப் படித்து வியவாத பெருமக்கள் இந்நாட்டில் இல்லை. இப்பாடலின் பகுதிகள் அடிக்கடி பத்தாம் வகுப்பு நூல்களில் வெளியிடப்பட்டு வருகின்றன.

## கல்வி விளக்கம்

மேனாட்டு அறிஞரான ஹெர்பர்ட்ஸ் ஸ்பென்ஸர் என்பவர் கல்வி விளக்கம் என்னும் நூலை எழுதி

வெளியிட்டார் அந்நூலில் சிறந்த அறிவு யாது?, அறிவுப் பயிற்சி, நன்னெறிப் பயிற்சி, உடற்பயிற்சி என்று நான்கு அதிகாரங்கள் உள்ளன. முதலியார் அவற்றைக் கற்றார்; ஒவ்வொரு தமிழரும் ஹெர்பெர்ட் ஸ்பென்சர் எழுதிய கல்வி விளக்க நூலின் கருத்துக் களை அறியவேண்டும் என எண்ணினார்; முதல் இரண்டு அதிகாரங்களை மொழிபெயர்த்தார். அரிய கருத்துக்களை மொழிபெயர்த்த முதலியார் தமிழ் நாட்டவர் பாராட்டிற்குரியவரானார்.

### தனிக்கவித் திரட்டு

செய்யுள் செய்யக்கூடிய அறிஞர் ஒருவரது வாழ்க்கையில் உணர்ச்சிப் பெருக்கெடுக்கும் சந்தர்ப் கள் பல ஏற்படுதல் இயற்கை. அங்ஙனம் ஏற்படும் உணர்ச்சிப் பெருக்குக் கவியாக வெளிப்படும். அந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்படும் தனித்தனிக் கவிகள் பிற் காலத்தில் ஒன்று சேர்க்கப்படும். அத்தொகுதி ‘ தனிக் கவித் திரட்டு ’ எனப்படும். முதலியார் மேற் சொன்னவாறு தம் வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப் பங்களில் பாடிய பாடல்களின் திரட்டே தனிக்கவித் திரட்டு என்பது. முதலியார் பாடிய தனிக்கவிகளுள் ஒன்று கீழ்வருவது. அதனைப் படித்து முதலியாரது தூய உள்ளத்தை நன்கறிந்துகொள்ளலாம்.

“ உண்மைக்கு மேலாம் மதமில்லை , பல்லா
உயிர்க்கன்பின் மிக்கதோர் பக்தி யில்லை ;
வண்மைக்கு மேலுப கார மிலைநல்
வசனத்தின் மேலுப சார மில்லை ”

**கம்பராமாயண சாரம்**

கம்பர் பாடிய இராமாயணம் கம்பராமாயணம் என்பது. அவர் இராமன் வரலாற்றை பதினாயிரத்து ஐந்நூறு செய்யுட்களில் பாடியுள்ளார். அத்துணைச் செய்யுட்களையும் படித்து இராமாயண வரலாற்றையோ கம்பனது கவித் திறமையையோ காண்பது என்பது மிகச் சிலரால்தான் முடியும். நாள் முழுவதும் வேலை செய்யும் தொழிலாளிகளும் பிற அலுவலகங்களில் வேலை செய்பவர்களும் தம் ஓய்வுநேரத்தில் கம்பராமாயணச் சுவையை அனுபவிக்க வேண்டுமென்று விரும்பினால், அதற்குத் தகுந்த சுருக்கநூல் இல்லை. அதனால் பொது மக்கள் நூலின் பெருமையையோ கவியின் பெருமையையோ உள்ளவாறு உணர்ந்து அநுபவிக்க முடியவில்லை. முதலியார் இக்குறைப்பாட்டை நீக்கவேண்டும் என்று விரும்பினார். அவர் பல ஆண்டுகள் உழைத்து, பதினாயிரத்து ஐந்நூறு பாடல்களையும் நன்காராய்ந்தார். கதையின் தொடர்பு கெடாமல், ஆனால் சுவையுள்ள பாடல்களையும் விடாமல், ஒவ்வொரு காண்டத்திலும் உள்ள சாரமான செய்யுட்களை முறைப்படுத்தினார்; பிறகு அவற்றுக்கு விளக்கமான உரையும் கதைத் தொடர்பும் எழுதி ஒரு காண்டத்துக்கு ஒரு நூலாக வெளியிட்டார். அச் சுருக்க நூல்கள் தமிழறிஞராலும் பொது மக்களாலும் வரவேற்கப்பட்டன. முதலியார் செய்த தமிழ்ப்பணி வரிசையில் இக் கம்பராமாயண சார வெளியீடு மிகவும் முக்கியமானது என்பது அறிஞர் கருத்து.

## இறவாத புகழ்

முதலியார் எந்தப் பள்ளியிலும் தமிழ்ப் புலவராக இருந்தவர் அல்லர். அவ்வாறிருந்தும், அவர் தாய் மொழிப் பற்றினால் தமிழை நன்கு கற்று, மொழி பெயர்ப்பு வசனநூல்களைச் செய்தார்; சுவர்க்க நீக்கம் போன்ற மொழி பெயர்ப்புக் காவியங்களைச் செய்தார்; அகலிகை வெண்பா முதலிய தமிழ்ச் செய்யுள் நூல்களால் தமது செய்யுள் செய்யும் திறத்தை வெளிக் காட்டினார்; 'இராமாயண வரலாறும் தென்னிந்திய சாதி வரலாறும்' என்னும் நூலாலும் வேறு பல கட்டுரைகளாலும் தாம் ஆராய்ச்சியிலும் பயிற்சியுடையவர் என்பதை நாட்டியச் செய்தார். முதலியாருடைய சிலேடை வெண்பா, அவரது தமிழ் இலக்கண-இலக்கிய அறிவை நன்கு வெளிப் படுத்தும்.

இங்ஙனம் தமது அரிய தமிழ்ப்பணியைத் தமிழகத்தில் நிறுத்தி, (1946-இல்) மறைந்த வெள்ளகால்-சுப்பிரமணிய முதலியார் அவர்களை அறிவுடைத் தமிழர் மறவார். அவருடைய நூல்கள் தமிழறிஞர்களால் இன்றும் விரும்பிக் கற்கப்படுகின்றன. அவருடைய நூல்கள் உள்ளளவும் அவர் பெயர் தமிழரது மன ஏட்டில் பதிவு பெற்றிருக்கும்.

# III. ஆயுர்வேத ரத்நாகரம் பண்டிதை மஹேன்மணி அம்மையார்

## 1. தமிழகமும் பெண் கல்வியும்

(கி. பி. 1863—1908)

**முன்னுரை : சங்ககாலப் பெண்கல்வி**

நமது தமிழகத்தில் ஏறத்தாழ 1800 ஆண்டு களுக்கு முற்பட்ட காலம் சங்ககாலம்—மதுரையில் பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த காலம் என்று பழைய நூல்கள் கூறுகின்றன. அக்காலத்தில் செய்யப்பட்ட நூல்கள் 'சங்க நூல்கள்' என்று சொல் லப்படும். அச்சங்க நூல்களில் உள்ள செய்யுட்கள் ஏறத்தாழ 400-க்கு மேற்பட்ட புலவர்களால் பாடப் பட்டவை. அப்புலவருள் ஏறத்தாழ 25 பேர் பெண் பாற் புலவர்கள் என்பது தெரிகிறது.

அப்பெண்பாற் புலவர்களுள் அரசியர், சிற்றரசர் மகளிர் முதல் குறத்தி முதலிய பல்வேறு இனத்துப் பெண்கள் ஈராக எல்லா இனத்துப் பெண்களும் புலமை பெற்றிருந்தனர் என்பது அப்பாடல்களால் தெரிகிறது. பூதப்பாண்டியன் மனைவி, பாரி மகளிர், ஔவையார், நப்பசலையார், ஒக்கூர் மாசாத்தியார், நச்செள்ளையார், காவற்பெண்டு, பேய்மகள்[1], இளஎயினி, வெண்ணிக் குயத்தியார், காமக்கண்ணியார், அள்ளூர் நன் முல்லையார், ஆதிமந்தியார், கச்சிப் பேட்டு நன்னாகை

1. பேய்மகள் - தேவராட்டி, பூசாரிச்சி, பேயினது ஆவேச முற்றவள் எயினி வேடர் குலத்திற் பிறந்த மகள்

யார், நன்ஞைகையார், பூங்கணுத்திரையார், வெள்ளி வீதியார், குறமகள் இளவெயினி, நக்கண்ணையார் முதலிய பெண்மணிகள் அக்காலத்து அரசரும் புலவரும் பாராட்டத் தக்க முறையில் கவிபாடிச் சிறப்புப் பெற்றனர்; அரசர்களால் சரியாசனத்தில் அமர்த்தப் பட்டுப் பரிசில் பெற்றனர். அக்காலத்தார் அப்பெண் மணிகளைக் கல்வி கொண்டே மதிப்பிட்டனர்.

எப்பாடுபட்டாயினும் ஆணும் பெண்ணும் கல்வி கற்கவேண்டும் என்பது அக்காலக் கொள்கையாக இருந்தது. 'கற்றவனையே அரசன் கணிப்படுத்துவான்' என்று பாண்டியன் நெடுஞ்செழியன் பாடியுள்ளான். எவரிடத்தும் சென்று பரிசில் பெற்று வாழவேண்டிய எளிய நிலையில் இல்லாத கண்ணகி போன்ற கற்புடைய மகளிரும் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதை நோக்க, சங்க காலத்தில் நமது தமிழ்ச் சமுதாயம் கல்வியில் எந்த அளவு சிறந்திருந்தது என்பது நன்கு விளங்கும்.

## செய்யுள் இலக்கணம் செய்த பெண்மணிகள்

தமிழ் எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், செய்யுளிலக்கணம், அணி இலக்கணம், (அலங்காரம்) என்னும் ஐவகை இலக்கணங்களை உடையது. இவற்றுள் செய்யுள் இலக்கணம் கடினமானது. வெண்பா முதலிய பாக்களையும் அவற்றின் பல்வேறு வகைகளையும் இன்னபடி பாட வேண்டும் என்ற விதிகளைக் கூறுவதே செய்யுள் இலக்கணம். இக்கடின இலக்கணத்தை நூல்வடிவிற் செய்வதற்கு இலக்கணத்தில் பெரும் புலமை

வேண்டும். அத்தகைய புலமை பெற்றுத் தமிழில் செய்யப்பட்ட பழமையான நூல் தொல்காப்பியம் என்பது. அதனைச் செய்தவர் தொல்காப்பியர் என்னும் பெரியார். ஆனால் அவர் செய்யுள் இலக் கணத்தைத் தனி நூலாகச் செய்யவில்லை. தாம் எழுதிய தொல்காப்பியம் என்னும் பெரிய இலக்கண நூலில் செய்யுள் இயல் என்று ஒரு அதிகாரமே பாடி யுள்ளார். ஆனால் அதே காலத்தில் **பெருங்காக்கைப் பாடினியார்** என்ற பெண்பாற் புலவர் செய்யுள் இலக்கண நூலைச் செய்தார்; அவர் அக்காலத்தில் தொல்காப்பியரைப் போலப் புகழ் பெற்ற இலக்கண ஆசிரியர் என்று பழைய நூல்கள் கூறுகின்றன. அவருக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின் மற்றொரு **சிறு காக்கைப் பாடினியார்** தோன்றினார். அவரும் முன்னவரைப் போல, அக்காலத்திற் கேற்ற முறை யில், செய்யுள் இலக்கண நூல் ஒன்றைப் புதிதாக எழுதினார். முன்னவர் செய்தநூல் **பெருங்காக்கைப் பாடினியம்** எனப்பட்டது; பின்னவர் செய்த நூல் **சிறு காக்கைப்பாடினியம்** எனப்பட்டது. இவ்வாறு சங்ககாலத்தில் செய்யுள் இலக்கணம் பாடும் நிலையில் பெண்பாற் புலவர்கள் நமது தமிழ் நாட்டில் இருந் தார்கள் என்றால், அக்காலத்தில் இருந்த நம் பாட்டி மார்களின் தமிழ் அறிவை என்னென்பது !

## இடைக்காலத்தில் பெண் கல்வி

சங்க காலத்துக்குப் பிறகு 63 நாயன்மார்கள் தோன்றிச் சைவத்தை வளர்த்தார்கள்; 12 ஆழ் வார்கள் தோன்றி வைணவத்தை வளர்த்தார்கள்.

சைவ அடியாருள் காரைக்கால் அம்மையார் என்னும் வணிகர் குலப் பெண்மணியார் சிவபெருமான் மீது அந்தாதி முதலிய பிரபந்த நூல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்கள் அந்த அம்மையாருடைய தமிழ் அறிவை நன்கு காட்டுகின்றன. வைணவ அடியாருள் பெண்பாற் புலவர் ஆண்டாள் என்பவர். அந்த அம்மையார் பாடியுள்ள அருட்பாடல்கள் பல. திருப்பாவை ஒன்றே அவரது கவிபாடும் ஆற்றலைக் காட்டப் போதுமானது. இடைக் காலத்தில் (கி. பி. 300—900) இத்தகைய பெண்பாற் புலவர்கள் நமது தமிழ் நாட்டில் வாழ்ந்து தமிழையும் சமயத்தையும் வளர்த்தனர் என்பது நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் சிறப்பான செய்தியாகும்.

பிற்காலத்தில் பெண் கல்வி

சோழர் காலத்தில் கோயிலில் இருந்த தேவர் அடியார்கள் தமிழ்த் திருமுறைகளை ஓதிவந்தார்கள். இராஜராஜ சோழன் பாட்டியாரான செம்பியன் மாதேவியார், அவனுடைய தமக்கையான குந்தவையார் அவனுடைய மனைவிமார்கள் முதலியோருடைய பக்திப் பெருக்கையும் சமயத் திருப்பணிகளையும் நோக்க, அவர்கள் தமிழ்க் கல்வியும் சமயக் கல்வியும் நன்கு கற்றவர்கள் என்பதை யூகிக்கலாம். சோழர் காலத்து மடங்களில் பெண்களும் சமயக் கல்வி பெற்றனர் என்பது சோழர் காலத்துக் கல்வெட்டுகளால் தெரிகின்றது. சோழர்க்குப் பிறகு விஜயநகர அரசர்கள் காலத்தில் அதிவீரராம பாண்டியனது அண்ணன் மனைவி, அதிவீரராமர் பாடிய நூல்களைப்

பார்வையிட்டுக் குற்றங் கூறக்கூடிய நிலையில் இருந்தார் என்று அவர் வரலாறு கூறுவதிலிருந்து, அந்த அம்மையாரது கல்வித் திறத்தை நன்கு அறியலாம்

எங்கும் ஆங்கிலமே பரவி நிற்கும் இந்தக் காலத்திலும் நமது தமிழ் நாட்டில் பெண்பாற் புலவர்கள் இருந்தார்கள்—இப்பொழுதும் இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பெரும் புகழொடு வாழ்ந்த பெண்பாற் புலவர் சிலராவர். அவருள் குறிப்பிடத்தக்கவர் காந்தி புராணம் பாடிய பண்டிதை அசலாம்பிகை அம்மையார், ஆயுர்வேத ரத்நாகரம் பண்டிதை மனோன்மணி அம்மையார் என்னும் இருவராவர். இவ்விருவருள் முன்னவர் மிக்க முதுமை அடைந்து காஞ்சிமா நகரில் வாழ்ந்துவருகின்றார். பின்னவர் தமிழிலும் மருத்துவத்திலும் பெரும் புகழ் பெற்றிருந்து இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் காலமானவர். இவ்வாறு மருத்துவத்திலும் தமிழிலும் புலமை பெற்றிருந்த பெண்மணிகளைத் தமிழுலகம் மிகுதியாகப் பெறவில்லை. இரு கலைகளிலும் வல்ல பெண்பாற்புலவர் ஒருவர் இருந்து மறைந்தாரெனில், அவரது வரலாறு அவர் சமுதாயத்தைச் சேர்ந்த நாம் படித்தறியத் தக்கதாகும். ஆதலின் காலஞ் சென்ற அவ்வம்மையாரது அரிய வரலாற்றை இங்குக் காண்போம். அதில் காணப்படும் நல்லவற்றை நமது வாழ்க்கையில் பின்பற்றி, நாம் சிறப்படைவோமாக.

## 2. இளமையும் கல்விப் பயிற்சியும்

### குன்றத்தூர்

இது சென்னைக்கு அடுத்த பல்லாவரம் புகை வண்டி நிலையத்திலிருந்து நான்கு கல் தொலைவில் உள்ள சிற்றூர் ஆகும். இதற்குச் சென்னையிலிருந்து நேரே பஸ் போகிறது. இவ்வூர் சோழர் காலத்தில் (கி. பி. 900—1300) சிறந்த நிலையில் இருந்தது. பெரிய புராணம் பாடியவரும் இரண்டாம் குலோத் துங்கனுடைய முதல் அமைச்சரும் ஆகிய சேக்கிழார் என்னும் பேரறிஞர் பிறந்த பதி அதுவே. அப்பதி திருநாகேஸ்வரம், நத்தம் என்னும் இரண்டு சிற்றூர் களாக இருக்கிறது. இரண்டையும் ஏறத்தாழ அரைக் கல் நீளமுள்ள ஒரு பாதை ஒன்றுபடுத்துகிறது. அப்பாதையின் இரண்டு பக்கங்களிலும் அங்கங்கே இரண்டொரு தெருக்களும் வீடுகளும் பசிய வயல் களும் காண்கின்றன. நத்தம் எனப்படும் சிற்றூரில் தான் சேக்கிழார் கோயில் இருக்கிறது. அங்குள்ள சைவ-வைணவக் கோயில்கள் பழுதுபட்டுக் கிடக் கின்றன. குன்றத்தூர் வயல்கள் செம்பரம்பாக்கத்து ஏரிப் பாய்ச்சலைப் பெற்றுச் செழித்துள்ளன.

சேக்கிழார் சோழ அரசனது முதலமைச்சர் என்பது முன்பே கூறப்பட்டது. அவர் காலத்தில் குன்றத்தூர் மிக்கசிறப்படைந்தது. அவர் சைவப் பெருநூலாகிய பெரிய புராணத்தைப் பாடியது முதல்,

அவர் பிறந்த குன்றத்தூர் சைவ உலகிற் பெயர்பெற்றது; சைவர்களுக்கும் யாத்திரைத் தலமாயிற்று. அங்கு இன்றும் ஆண்டுதோறும் ஜூன் மாதம் சேக்கிழார் விழா 10 நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆயிரக்கலைக்கான மக்கள் விழாவைக் கண்டு களிக்கின்றனர்.

### மண்ணிவாக்கம்

இத்தகைய பெருஞ் சிறப்புடைய குன்றத்தூரை அடுத்துள்ள சிற்றூர்களில் மண்ணிவாக்கம் என்பது ஒன்று. அவ்வூர் செம்பரம்பாக்கம் ஏரிப்பாய்ச்சலைப் பெற்றது. அவ்வூரை நான்கைந்து தெருக்கள் அழகுபடுத்துகின்றன. அவ்வூரில் நெய்தற்றொழிலும் வேளாண்மைத் தொழிலும் சிறப்பாக நடந்து வந்தன. நெய்தற்றொழிலை நடத்திவந்த செங்குந்த முதலிமார்களில் அருணசல முதலியார் என்பவர் ஒருவர். அவர் முன் சொன்ன குன்றத்தூரில் பல்லாண்டுகள் இருந்தவர். அங்கு இருந்தபடியே மண்ணிவாக்கத்தில் விளைநிலங்களை வாங்கினர்; பின்னர் அச்சிற்றூர்க்கே குடியேறினர். அவருக்கு முருகேச முதலியார் என்னும் மைந்தர் இருந்தார். அவர் வயல் வேலையிலும் வியாபாரத்திலும் ஈடுபட்டு இருந்தார்.

### முருகேச முதலியார்

முருகேச முதலியார் குன்றத்தூர்த் தொடக்க நிலைப் பள்ளியில் படித்தவர்; ஆயினும், தமது

சொந்த முயற்சியால் குன்றத்தூரில் இருந்த சைவப் புராணிகர் ஒருவரை அடுத்துத் தமிழ்ப் புராணங்கள் சிலவற்றைப் பாடங்கேட்டார்; பிறகு பயிர்த் தொழிலிலும் வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்த காலத்திலும் சென்னையிலிருந்து பல நூல்களை வரவழைத்துப் படித்துவந்தார். இவ்வாறு படிப்பில் அவருக்கு இயற்கையாக எழுந்து வளர்ந்த வேட்கை, அவர வீட்டில் நாளடைவில் பல தமிழ் நூல்களைச் சேர்த்துவிட்டது. முதலியார் தமிழ் நூல்களைப் படிப்பதுடன் நின்றுவிடவில்லை. குடும்பத்திற்குத் தேவையான மருத்துவ அறிவு பெற்றிருப்பது நல்லது என்ற எண்ணம் அவருக்குத் தோற்றியது. அதனால் அவர் தம்மூர் மருத்துவர் உதவிகொண்டு, சில மருத்துவ நூல்களைப் படித்தறிந்தார்; சாதாரண காய்ச்சல், சாதாரண இருமல், ஜலதோஷம் முதலிய சாதாரண நோய்களை நீக்கும் அளவுக்கு மருத்துவ அறிவினை ஓராண்டில் பெற்றார்; பின்னர் வேறொரு மருத்துவரைக் கொண்டு சில மருந்து வகைகளைச் செய்வதிலும் சில நோய்களுக்குரிய காரணங்களைக் கண்டறிவதிலும் பழக்கம் பெற்றார். அவர் முயற்சியால், அவரது வீட்டில் சிறு நூல் நிலையம் ஏற்பட்டாற் போல, சிறிய மருத்துவ நிலையமும் ஏற்பட்டுவிட்டது. இந்த இரண்டு துறைகளிலும் அவருக்கு உற்ற உதவியாக இருந்தவர் அவர் மனைவியார் அலர்மேல் அம்மையார் என்பவர்.

### மக்கட் பேறு

முருகேச முதலியாருக்கும் அலர்மேல் அம்மையாருக்கும் பிறந்த பிள்ளைகள் நால்வர். அவருள் மூவர் ஆண் மக்கள். பெண் மகளார் ஒருவர். அம் மகளாரே நமது ஆயுர்வேத ரத்நாகரம் பண்டித—மனோன்மணி அம்மையார் என்பவர். அவர் 1863-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் பேணி வளர்த்தமையால் மக்கள் நால்வரும் நன்முறையில் வளர்ந்துவந்தனர். நால்வரும் தந்தையாரைப் பின் பற்றி நன்கு கற்றுவந்தனர்; அவரது மருத்துவப் பணியிலும் உடனிருந்து ஓரளவு பயிற்சி பெற்றனர்.

### அம்மையார் கல்வி கற்றல்

மனோன்மணி அம்மையார், தம் உடன் பிறந்தாரைப் போலவே தொடக்க நிலைப்பள்ளியில் கல்வி கற்றார். பின்னர்த் தந்தையாரிடம் அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ் முதலிய சிறு நூல்களைப் பாடங்கேட்டார்; 15 வயதிற்கு மேல் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்களை பாடங்கேட்டார்; சைவத்திருமுறைகளைத் தாமாகப் படித்துணர்ந்தார். அக்குடும்பத்தில் தந்தையார் தம் பிள்ளைகள் நால்வருக்கும் தமிழ்கல்வி ஒன்றுகவே கற்பித்த போதிலும், அந்நால்வருள், முதலில் நின்ற வர் மனோன்மணி அம்மையாரே ஆவர். அம்மையார் எப்பொழுதும் ஏடுங்கையுமாகவே இருந்தார். நன்னூல் சூத்திரங்களை நன்கு மனப்பாடம் செய்தார்; உரையைத் தாமாகவே பலமுறை பயின்று இலக்கண

உண்மைகளைத் தெரிந்தார்; தாம் படித்த நூல்களில் உள்ள சுவை மிகுந்த பாடங்களை மனப்பாடஞ் செய்தார்; தாம் சைவராதலால் திருவாசகப் பாடல்களையும் தேவாரத்தில் சிறந்த பாடல்களையும் மனப்பாடம் செய்தார். தமது அருமை மகளார் தம் மூன்று ஆண் பிள்ளைகளைவிடச் சமயப்பற்றிலும், தமிழ் அறிவிலும் சிறந்து விளங்குவதைக் கண்ட தந்தையார் மிக்க மகிழ்ச்சி அடைந்து, அம்மையாரைத் தம் உயிராகக் கருதி, மேலும் பல நூல்களைக் கற்பித்ததுடன், மருத்துவத்துறையிலும் பயிற்சி அளித்து வரலானார்.

# 3. திருமண வாழ்க்கை

## அம்மையார் திருமணம்

அம்மையாருடைய சகோதரர் ஒவ்வொருவரும் போதிய அளவு கல்வி பயின்று ஒவ்வொரு அலுவலில் ஈடுபட்டனர். ஒருவர் பர்மாவிலும், ஒருவர் சென்னையிலும் இருந்து வியாபாரம் செய்துவந்தனர். ஒருவர் மட்டும் மண்ணிவாக்கத்திலேயே இருந்து பயிர்த் தொழிலையும் தந்தையார் செய்துவந்த வியாபாரத்தையும் கவனித்துவந்தார். அம்மையார் ஏறத்தாழப் பதினெட்டு வயதினராக இருந்தபொழுது அவருக்குத் திருமணம் நடந்தது. 'கை நிறைந்த பொன்னைவிடக் கண் நிறைந்த கணவனே மேல்' என்ற முதுரைப்படி, மனோன்மணி அம்மையார் நல்ல ஒழுக்கமும் ஓரளவு கல்வியும் நல்ல உடற்கட்டும், குடும்பத்தை நடத்தத் தக்க அளவு வருமானமும் உடைய ஓர் இளைஞரை மணந்துகொண்டார். அத்திருமணம் அம்மையார் விருப்பப்படி நடந்ததே அன்றி வேறன்று.

## இல்லற வாழ்க்கை

அம்மையார் தாமாகவே கணவரைத் தேர்ந்தெடுத்தமையால் அவர்தம் வாழ்க்கை இன்பமாகவே நடந்துவந்தது. அவர் கணவரும் தம் மனைவியார் சொற்படி தமிழ் நூல்களைத் தம் ஓய்வு நேரங்களில் படித்து வந்தார். அம்மையார் தந்தையாரிடம் கற்றறிந்த குடும்ப வைத்திய முறைகள் சிலவற்றையும் கணவர் கற்கலானார். இவ்வாறு ஒவ்வொரு குடும்பத்

திலும் உள்ள கணவன் அல்லது மனைவி அல்லது இருவருமே குடும்ப வைத்திய முறைகள் சிலவற்றி லேனும் பயிற்சி பெற்றிருத்தல் எவ்வளவு பயனுடை யது என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

## இன்பத்தில் துன்பம்

"ஒரு பசுவிற்கு இரண்டு கொம்புகள் இருத்தல் போல இல்லற மென்னும் இனிய மாளிகையில் வாழத் தக்கார் கணவன் மனைவி என்றும் இருவரே ஆவர். அவ்விருவரும் தமக்குள் சிறிதும் மாறுபாடில்லாமல் வாழ்க்கையை நடத்தினுல்தான், அவர்கள் நடத்தும் இல்லறம் நல்லறமாக விளங்கும்" என்று பெரியோர் கூறுவர். இக்கூற்றின்படி மனோன்மணி அம்மை யாரும் மாசற்ற அவரது கணவரும் ஒத்த கருத்தின ராய் இல்லறத்தை இவ்வாறு நடத்திவந்தனர். அவர் களது மணவாழ்க்கை சந்திரனைப் பெற்ற இரவு போலவும், தாமரையைப் பெற்ற குளம் போலவும், உயிர் அமைந்த உடல் போலவும் பொலிவுற்று விளங்கியது.

ஆனுல், அவர்களது இன்ப வாழ்க்கை ஏறத்தாழ ஏழு ஆண்டுகளுக்கு மேல் நடைபெறவில்லை. அம்மையாருடைய கணவர் ஒருநாள் காய்ச்சல் கண்டு நோய்வாய்ப்பட்டார். பலவகை முயற்சி களாலும் நோய் குணப்படவில்லை. இறுதியில் அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார். அப்பொழுது அம்மை யாருக்கு ஏறத்தாழ 25 வயது.

# 4. சென்னை வாழ்க்கை

## சென்னையில் மருத்துவப் பயிற்சி

சில மாதங்களுக்குப் பிறகு அம்மையார் கணவர் இறந்த துயரத்தை ஒருவாறு ஆற்றிக்கொண்டார்; மருத்துவத் துறையில் தக்க பயிற்சி பெற்ற பிறகு தமது எஞ்சிய காலத்தை அத்துறையிலேயே செல வழித்துப் பொதுமக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று விரும்பினர். அக்காலத்தில் சென்னையில் தஞ்சாவூர்-சுப்பிரமணிய பண்டிதர் சிறந்த மருத்துவராக விளங்கினர். அவரது பெயரும் புகழும் சென்னையைச் சுற்றிலும் 20 மைல் அளவு பரவி இருந்தன. அம்மையார் அம்மருத்துவப் புலவரிடம் சில ஆண்டுகள் இருந்து மருத்துவப் பயிற்சி பெற விரும்பினர். தம் செல்வ மகளாருடைய விருப்பத்தின் படி முருகேச முதலியாரும் அவர் மனைவியாரும் அம்மையாருடன் சென்னையிற் குடியேறினர். முருகேச முதலியார் சுப்பிரமணியப் பண்டிதரைச் சந்தித்து, தம் மகளாரது விருப்பத்தைத் தெரிவித்தார்; மறுநாள் தம் மகளாரையே மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். மருத்துவர் அம்மையாருடன் பேசி, அவரது தமிழறிவையும் மருத்துவ அறிவையும் அறிந்து மகிழ்ந்தார்; தாம் அவருக்கு மருத்துவம் கற்பித்தல் கூடும் என்பதை அறிவித்தார். அன்று முதல் அம்மையார் பண்டிதர் அவர்களின் மருத்துவ மாணவியார் ஆனர்; ஏறத்தாழ நான்கு ஆண்டுகளில் பண்டிதரவர்களிடம் மருத்துவத் துறையில் நன்கு

பயிற்சி பெற்ருர் ; சிறப்பாகப் பெண்கள் மருத்துவத் திலும், குழந்தைகள் மருத்துவத்திலும் பெயர் பெற்ருர்.

## மருத்துவத்தில் புகழ்பெறுதல்

நான்கு ஆண்டுகட்குப் பிறகு அம்மையார் தமது வீட்டிலேயே மருத்துவத் தொழிலைத் துவங்கினர். அவர் பெண்கள் மருத்துவத்திலும் குழந்தை மருத்து வத்திலும் சிறந்து விளங்கியமையால், அவர் இருந்த சென்னை - கொண்டித் தோப்புப் பகுதியில் இருந்த பெண்களும் குழந்தைகளும் அவரிடமே மருத்துவம் செய்துகொள்ளலாயினர். அம்மையார் அவர்க ளிடம் வற்புறுத்திக் காசு வாங்கியதில்லை ; அவர்களே விரும்பி மேசைமீது வைத்த தொகையை எடுத்துக் கொண்டார். நோய்நீக்குந் திறமையாலும், பணத் தில் கண்டிப்பு இல்லாமையாலும், எல்லோரிடமும் மலர்ந்த முகத்துடன் பேசி வந்தமையாலும் அம்மை யாரது பெயர் சென்னை நகரில் எல்லாப் பகுதிகளிலும் பரவியது. அதனல் நகரின் பல பகுதிகளிலிருந்தும் பலர் அவரிடம் மருத்துவ உதவி நாடி வரலாயினர். அம்மையார் மருத்துவ வேலை கவனிக்கும் நேரம் தவிர எஞ்சிய நேரத்தைப் புதிய மருத்துவ நூல்களை யும், தமிழ் நூல்களையும் தாமாகக் கற்றுவந்தார்.

## பூவை-கலியாண சுந்தரர்

மஹேன்மணி அம்மையார் சென்னையில் வாழ்ந்த காலத்தில் அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியார் என்பவர் ஜார்ஜ் டவுன் என்னும் நகரப்

பகுதியில் பெரும் புலவராக விளங்கினர். அவரிடம் பலர் தமிழ் பயின்றனர். முதலியார் பாடஞ் சொல்வதிலும், சொற்பொழிவு செய்வதிலும் திறமை மிக்கவர். முதலியாரும் மனேன்மணி அம்மையார் இருந்த நகரப் பகுதியில் வாழ்ந்துவந்தார். அவரது பெரும் புகழைக் கேள்வியுற்ற அம்மையார், அவருடைய இலக்கியச் சொற்பொழிவுகளையும், சமயச் சொற்பொழிவுகளையும், அவர் பேசிய இடங்களுக்குச் சென்று கேட்டார்; அவற்றைக்கொண்டு அவருடைய கல்வியின் ஆழத்தை நன்கு அறிந்தார்; அப்பெரியாரிடம் மிக்க மதிப்புக் கொண்டார்.

### முதலியார் மருத்துவவுதவி பெறுதல்

பூவை-கலியாணசுந்தர முதலியார் அம்மையாரது மருத்துவத் திறனைக் கேள்வியுற்ருர்; நோயுற்ற தம் மனைவி மக்களை அவரிடம் முதன் முறையாக அழைத்துச் சென்ருர். பெரும்புலவராகிய முதலியார் தம் வீடு நோக்கி வருதலைக் கண்ட அம்மையார் எழுந்து வணக்கம் கூறி இனிய முகத்துடன் வரவேற்ருர். அம்மையாருடைய திருநீறு அணிந்த-மலர்ந்த-முகத்தைக் கண்டும் இனிய பேச்சுக்களைக் கேட்டும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்; அம்மையார் தம்மிடம் நடந்து கொண்டவாறே மற்ற மக்களிடமும் பேரன்புடன் நடந்துகொண்டதைப் பார்த்ததும் அவரிடம் பெரு மதிப்பு கொண்டார்; தாம் மீண்டும் அன்று மாலையில் வருவதாகச் சொல்லிச் சென்ருர்.

## ஒருவருக்கு ஒருவர் மாணவர்

முதலியார் தாம் சொன்னபடியே, அன்று மாலையில் மீண்டும் சென்று ஒருமணிநேரம் அம்மையாரிடம் அளவளாவினர். அம்மையாருடைய வரலாறு முழுவதையும் கேள்வியுற்று வருத்தமும் அன்பும் கொண்டார்; தமது குடும்பத்தார் அடிக்கடி நோய்வாய்ப் படுதலால் தாம் மருத்துவத் துறையில் ஓரளவேனும் பயிற்சி பெறுதல் நல்லது என்று கருதுவதாகவும், அம்மையார் தமக்கு ஆசிரியராயிருந்து மருத்துவம் கற்பிப்பதாயின் தாம் அதற்கு நன்றி செலுத்துவதாகவும் கூறினர். அம்மையார் தாம் அவருக்கு மருத்துவம் கற்பிக்க விரும்புவதாகவும், அதற்குப் பதிலாக அவர் தமக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டுமென்றும் கூறினர். முதலியார் பெரு மகிழ்ச்சியுடன் அதற்கு இசைந்தார். மறுநாள் முதல் குறித்த நேரத்தில் முதலியார் அம்மையார் இல்லஞ் சென்று மருத்துவம் கற்றூர்; தமிழ் கற்பித்தார்; இவ்வாறு ஆண்டுகள் சில கழிந்தன. அம்மையார் கவிபாடும் ஆற்றல் பெற்றூர். முதலியார் குடும்ப மருத்துவ முறைகளை அறிந்தார்.

## மாதர் கல்விச் சங்கம்

பூவை - கலியாணசுந்தர முதலியாரிடம் மஞ்ஞன்மணி அம்மையாரைப் போலக் கல்வி பயின்ற பண்டிதை - நாராயணி அம்மையார், ஜெயலட்சுமி அம்மையார், மஞ்ஞன்மணி அம்மையாரின் சகோதரர் மகளான அகிலாண்ட நாயகி அம்மாள் முதலியோர்

தமிழ் கற்க விரும்பும் பெண்மணிகளுடன் சேர்ந்து, மாதர் கல்விச் சங்கம் என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர். அச்சங்கத்தின் சார்பில் வாரத்திற்கு ஒரு முறை பெரிய புராணச் சொற்பொழிவுகளை நடத்திவந்தனர். அம்மையாருடைய சொற்பொழிவுகள் இனிய குரலில் அமைந்தவை. அவர் இசையோடு செய்யுட்களைப் பாடி எல்லோரும் தெரிந்துகொள்ளும் எளிய முறையில் பொருள் விளக்கம் செய்வார். அதனால் அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்க மாதர் பலர் கூடுவது வழக்கம். அம் மாதர்சங்கத்தார் சென்னையின் பல பகுதிகளில் மாதந்தோறும் கூடி, இங்ஙனம் சொற்பொழிவாற்றித் தமிழ் வளர்த்துவந்தனர். அவர்கள் முயற்சியால் சென்னையின் பல பகுதிகளிலும் மாதர்களுக்கிடையே தமிழறிவும், சமய அறிவும் வளர்ந்துவரலாயின.

## அம்மையார் தமிழ்ப்புலமை

மனோன்மணி அம்மையாரின் தமிழ்ப் புலமை ஏறத்தாழ 1891-ஆம் ஆண்டு முதல் தமிழ் நாட்டில் பரவலாயிற்று. அம்மையார் அந்தாதி, மாலை, பதிகம், சதகம் முதலிய சிறு பிரபந்தங்களைப் பாடி அச்சிட்டு வெளிப்படுத்தினர். அக்காலப்புலவர்கள் அவற்றைப் பாராட்டிப் பாடிய பாக்களிலிருந்து அந்நூல்களின் பெருமையை நாம் நன்கு அறியலாம். அந்நூல்களைப் பாராட்டிப் பாடிய பெரும் புலவர்களுள் குறிப்பிடத்தக்கார் இவராவர் :—திருப்புகழ்ச் சுவாமிகள் எனப்பட்ட தண்டபாணி சுவாமிகள், திரு ஆவடுதுறை ஆதீனம் சுப்பிரமணியத் தம்பிரான், தசாவ

தானம் பேறை - ஜகந்நாதப்பிள்ளை, மனோன்மணீய ஆசிரியரான பேராசிரியர் சுந்தரம் பிள்ளை M. A., யாழ்ப்பாணம் சரவணமுத்துப் பிள்ளை B. A., வெண் பாப்புலி வேலுசாமிப் பிள்ளை, திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை, ஊற்றுமலைச் சம்ஸ்தான வித்து வான் கந்தசாமிப்புலவர், சோடசாவதானம் - சுப்பராய செட்டியார்.

## தனிப்பாடல்கள்

இந்நூல்கள் தவிர, அம்மையார் பல சந்தர்ப்பங் களில் பல்வேறு காரணங்களால் அக்காலப்புலவர்கட்கு எழுதி விடுத்த பாக்கள் பல. அவை 'தனிப்பாடல்கள்' என்னும் தலைப்பில் அம்மையாரால் தொகுத்து வைக்கப் பட்டிருந்தன. அப்பாடல்கள் செய்யுள் செய்யும் அவரது திறமையை நன்கு உணர்த்த வல்லவை. அவற்றுள் ஒரு செய்யுளைக் கீழே காண்க :—

* "கத்தரிக்காய் வற்றல்தனைக் காண்பதெப் போதெனவே
* * * * —
ஆடி மதியென்றால் அதிக விலையேறும்
நாடிமுன மேயனுப்பல் நன்று"

இச்செய்யுள் தசாவதானம் பேறை—ஜகந்நாதப்

* இச் செய்யுளைத் தம் நினைவிலிருந்து கூறியவர் மனோன்மணி அம்மையாரது தமையனார் மகளாரான அகிலாண்ட நாயகி அம்மையார். இவர் இரண்டாம் அடியை மறந்துவிட்டமை யால், இங்கு அவ்வரி நிரப்பப் படவில்லை இவ்வரலாறு எழுது வதற்கு உரிய குறிப்புகள் பலவற்றைத் தந்து உதவியவர் இந்த அம்மையாரே ஆவர்

பிள்ளை அவர்களுக்கு அம்மையார் எழுதி விடுத்தது. இவ்வாறு அவர் எழுதிவிடுத்த பாடல்கள் மிகப்பல.

**மனோன்மணீயம்** (மருத்துவ நூல்)

தொல்காப்பியர் எழுதிய இலக்கண நூல் தொல்காப்பியம் எனப்படுகிறது. அவ்வாறே மனோன்மணி அம்மையார் எழுதிய நூல் மனோன்மணீயம் எனப் பெயர் பெற்றது. மருத்துவத்தில் தாம் கண்ட அனுபவ முறைகளையும் முன்னோர் எழுதியிருந்த மருத்துவச் செய்திகளையும் எல்லோரும் படித்து அறிந்துகொள்ளும்படி மிகத் தெளிவாக அம்மையார் செய்த மருத்துவ நூலின் பெயரே மனோன்மணீயம் என்பது.

## அழியாப் புகழ்

சென்னையிலிருந்த மருத்துவ அறிஞர்களும் கலியாணசுந்தரர் போன்ற புலவர் பெருமக்களும், நகரப் பெரியார் சிலரும் அம்மையாரது மருத்துவ அறிவைப் பாராட்டி **ஆயுர்வேத ரத்நாகரம்** என்னும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்தனர். இவ்வாறு மருத்துவ நூல் செய்த பெண்பாற் புலவரைத் தமிழகம் கண்டதில்லை. சங்ககாலத்தில் யாப்பிலக்கணம் செய்த பெண்பாற் புலவர் இருவரைத் தமிழகம் கண்டது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் மருத்துவ நூல் செய்த மனோன்மணி அம்மையாரை இத் தமிழகம் கண்டது. அம்மையார் 1908-ஆம் ஆண்டு தமது 45-ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அம்மையார் ஏறத்தாழத் தமது 25-ஆம் வயதில்


சென்னையிற் குடியேறினார்; முதல் ஐந்து ஆண்டுகள் மருத்துவ மாணவியராக இருந்தார்; 15-ஆண்டுகள் தமது மருத்துவப் புலமையை சிறப்பாகச் சென்னை யும் பொதுவாகத் தமிழ்நாடும் அறியச் செய்தார்; அதே காலத்தில் தம்முடைய செய்யுள் நூல்களால் தமது தமிழ்ப் புலமையையும், மனோன்மணீயத்தால் மருத்துவ அறிவையும் நாடறியச் செய்தார்; தண்டபாணி சுவாமிகள், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை போன்ற பெரியார்களிடமும் பாராட்டுப் பெற்றார் என்றால், அம்மையாரது தமிழ்ப் புலமையை என்னென்பது! பூவை-கலியாண சுந்தர முதலியா ரிடம் படித்த மாணவியருள் மனோன்மணி அம்மை யாரே பல நூல்களைச் செய்து அழியாப் புகழ் பெற்றவர். அவ்வம்மையாரது திருப்பெயர் நீடு வாழ்க!

அம்மையார் பாடிய நூல்கள் *

(1) பழநிப் பாமாலை
(2) பழநி யிரங்கல் விருத்தப் பதிகம்
(3) பழநி வெண்பாப் பதிகம்
(4) திருவாமாத்தூர் அழகிய நாதர் பஞ்ச ரத்தினம்
(5) சென்னைக் கந்தசுவாமிப் பதிகம்

* பிள்ளைகள் இந்நூல்களைப் பெயரளவில் அறிந் திருத்தல் நல்லது என்று கருதி இப்பட்டியில் தரப்பட்டுள்ளது. எனக்கு இந்நூல்களுட் சிலவற்றைக் கொடுத்து உதவியவர் வடபாதி-வேலு முதலியாராவர்

(6) திருவானைக்கா அகிலாண்ட நாயகி அந்தாதி
(7) திருமுல்லைவாயில் கொடியிடை நாயகி அந்தாதி
(8) திருமயிலைக் கற்பகவல்லி அந்தாதி
(9) திருக்கழுக்குன்றம் திரிபுரசுந்தரி மாலை
(10) பழநிச் சன்னிதி முறை
(11) பழநிச் சிங்கார மாலை
(12) பூவைச் சிங்கார சதகம்
(13) குன்றத்தூர் பொன்னியம்மன் பதிகம்
(14) புதுவைக் காமாட்சி அம்மன் பதிகம்
(15) "ஒருவனென்னும் சொல்லின் மேலெழுந்த வினாக்களும் விடைகளும்"
(16) தனிப்பாடற்றிரட்டும் பலபாடற்றிரட்டும்
(17) மனோன்மணீயம் (மருத்துவ நூல்)



அரசஞ் சண்முகனார்

# IV. அரசஞ் சண்முகனார்
(கி. பி. 1868—1911)

## 1. கல்விப் பயிற்சி

### பாண்டிநாட்டு ஆறுகள்

பாண்டியநாடு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி என்னும் மாவட்டங்களை உடையது. இவற்றுள் மதுரை மாவட்டத்தில் வையை ஆறும், திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணியும் பாயப் பெற்ற இடங்கள் மட்டும் வளத்தில் மிகுந்து மருத நிலமாகக் காட்சி அளிக்கின்றன.

### வையை ஆறு

வையை என்னும் பெரிய ஆறு மதுரை மாவட்டத்தைப் பல நூற்றாண்டுகளாகச் செழிப்பாக்கி வருகின்றது. அது அம்மாவட்ட மக்களுக்குச் செவிலித் தாய்போல் இருந்து உணவை அளித்து வருகின்றது. அதனால் மக்கள் ஆண்டுதோறும் பதினெட்டாம் பெருக்கன்று (ஆற்றில் பதினெட்டுப் படிகள் மறையும்படி வெள்ளம் வரும் நாள்) வையை ஆற்றுக்கு வணக்கம் புரிவது மரபு. இது பல நூற்றாண்டுகளாக நடைபெறும் வழக்கம். ஏறத்தாழ 1500 ஆண்டுகட்கு முன்னும் இப்பழக்கம் இருந்தது என்பதைப் பரிபாடல் என்னும் பழந்தமிழ் நூலைக்கொண்டு அறியலாம்.

**சோழவந்தான்**

மதுரை மாவட்டத்தில் வையை ஆற்றின் பாய்ச்சலால் வளமுற்ற ஊர்களில் **சோழவந்தான்** என்பது ஒன்று. அது மதுரைக்கும் திண்டுக் கல்லுக்கும் இடையில் இருப்பது. இதன் உண்மைப் பெயர் **சோழாந்தகன்** என்பது. 'சோழனுக்கு எமன்' என்பது இத்தொடரின் பொருள். இத்தொடர் பாண்டியன் விருதுப்பெயர்களில் ஒன்றாகும். இத் தொடர் காலப்போக்கில் 'சோழவந்தான்' என மருவி வழங்கலாயிற்று. சோழவந்தான் பாண்டியநாட்டுப் படை இருந்த இடங்களில் ஒன்றாகும். அவ்வூர் வையையாற்றின் கரையில் அமைந்திருப்பது; குறை வற்ற நீர்வளத்தையும் பூசாரத்தையும் உடையது. ஆற்றின் இரு கரைகளிலும் விழிகளுக்கு விருந் தளிக்கும் தென்னந்தோப்புக்கள் உண்டு. செந்நெல் விளைநிலங்கள் கண்ணுக்குப் பசுமையையும் குளிர்ச்சி யையும் உதவிக்கொண்டிருக்கும். மதுரை மாவட்டத் தில் வளமிக்க அந்த இடத்தை, கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்கர் ஆட்சியில் தளவா யாக இருந்த அரியநாத முதலியார் தமக்குரிய வாழிடமாகக் கொண்டார்.

முதலியார் தொண்டை நாட்டினர்; தொண்டை மண்டல வேளாளர். அவர் தம் இனத்தவரைப் பாண்டி நாட்டில் பசுமை நிறைந்த இடங்களிலெல் லாம் குடியேற்றினார்; சோழவந்தானில் மட்டும் முந்நூறு வீட்டாரைக் குடியேற்றினார்; அவர்கட்கு விடுதிகள் கட்டித் தந்தார்; அவர்களுக்கு உதவி

யாகப் பல வகைப்பட்ட தொழிலாளர்களைக் குடியேற்றினார். முந்நூறு வீட்டாரும் குடியிருந்த வீட்டைச் சுற்றிலும் கோட்டை கட்டப்பட்டது. அது 'முதலியார் கோட்டை' என இன்றும் வழங்கப் படுகிறது.

**சண்முகனார் பிறப்பு**

சோழவந்தானில் மேற்சொன்ன தொண்டை மண்டல வேளாளரும் பாண்டிநாட்டு வேளாளரும் நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். பாண்டிய நாட்டு வேளாளர் குடும்பம் ஒன்றில் பிறந்தவரே நமது புலவர் பெருமான் சண்முகனார் என்பவர். அவர் தந்தையார் பெயர் அரசப்பப் பிள்ளை என்பது. அவர் ஓரளவு நிலத்தை உடையவர்; நில வருவாய்கொண்டு தம்மளவில் இன்பமாகக் காலம் கழித்துவந்தவர். அவரது மனைவியார் நற்குண நல்லொழுக்கங்களில் சிறந்தவர். அவர் கணவர் கருத்தறிந்து காரியங்களைச் செய்து, வாழ்க்கையை வளமாக நடத்திவந்தார். அவ்விருவரது வாழ்க்கையை வளப் படுத்தத் தோன்றியவரே நம் சண்முகனார். அவர் 1868-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள் தோன்றினார்.

**வளர்ப்பு**

எதிர்காலத்தில் தமிழகத்தில் இணையற்ற இலக்கணப் புலவராகவும் வசனநூல்கள், பல செய்யுள் நூல்கள் இயற்றும் பெரும் புலவராகவும் விளங்கப் போகும் திருவுடை மைந்தரைப் பெற்றோர் காதலித்து,

கண்ணை இமைகள் காப்பதுபோலக் கருத்துடன் வளர்த்தனர் ; அவர்தம் மழலை மொழிகளைக் கேட்டு மகிழ்ந்தனர். 'நுண்ணறிவிற் சிறந்த பெரும் புலவர்' என்று பிற்காலத்தில் பெயரெடுத்த சண்முகனர், குழந்தைப் பருவத்திலேயே தந்தையாருடன் பூசையறையில் உட்கார்ந்து, தந்தையார் பூசை செய்வதிலும், தேவாரப் பாடல்கள் பாடுவதிலும் கருத்தைச் செலுத்தினர்; சைவ மரபில் பிறந்தவராதலால் சைவர்க்குரிய வைகறைத் துயிலெழுதல், வழிபாடு செய்தல் முதலிய நற்பணிகளில் இளமையிலேயே தம் பெற்றோருடன் ஈடுபட்டார்.

**தொடக்கக் கல்வி**

ஐந்தாம் ஆண்டு தொடங்கியவுடன் அவருக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்று தந்தையார் நினைத்தார் ; 'தொடக்கக் கல்வி கற்பிக்கத் தக்க இடம் எது? எவரை ஆசிரியராக அமர்த்தலாம்?' என்பனவற்றை ஆராய்ந்தார்; சமயப் பற்று மிகுந்த அவர், தம் மைந்தருக்கு முதலில் விநாயகர் கோவிலிலேயே கல்வி தொடங்கவேண்டும் என்று விரும்பினர்; ஊரில் பல பிள்ளைகளுக்கு நல்ல முறையில் தொடக்கக் கல்வி கற்பித்துவந்த அழகர்சாமி தேசிகர் என்பவரைச் சண்முகனர்க்கு ஆசிரியராக அமர்த்தினர். சோழவந்தான் சிதம்பர விநாயகர் கோவிலிலுள்ள கல்மண்டபத்தில் அழகர்சாமி தேசிகரிடம் சண்முகனர் தமது தொடக்கக் கல்வியைத் தொடங்கினர். சண்முகனர் ஆசிரியர் விரும்பத்தக்க முறையில் நடந்து, முறையாகக் கல்வி கற்றுவந்தார் ; நன்னெறி, நீதிவெண்பா இவற்றில்

தொடங்கி, படிப்படியாகப் பல தமிழ் நூல்களைத் தேசிகரிடம் பாடம் கேட்டார்; தமது அறிவு நுட்பத்தால் மேலும் பல நூல்களைக் கற்றுக் கவிபாடும் ஆற்றல் பெற்றார். அவர் தமது பதினான்காம் வயதில் அகரமுதல் னகரம் முடிய அமைந்துள்ள எழுத்துக்களை முதலாகக் கொண்ட முப்பது செய்யுட்களைப் பாடினார்; பாடிய அவற்றைத் தமது ஆசிரியரான தேசிகரிடம் காட்டிப் பொருள் கூறினார். தேசிகர் வியப்புற்று, மகிழ்ச்சியுடன் தம் மாணவரை ஆசீர்வதித்தார்.

## புலமை பெறுதல்

சோழவந்தானில் கின்னிமடம் என்பது சைவ சமய மடமாகும். அம்மடத்தில் துறவு பெறும் மாணவர்களுக்குத் தமிழ் நூல்களைக் கற்பிக்க துறவி ஒருவர் இருந்தார். அவர் பெயர் சிவப்பிரகாசசுவாமிகள் என்பது. அக்காலத்தில் சோழவந்தானில் அவர் சிறந்த தமிழாசிரியராக விளங்கினார். அதனால் சண்முகனார் அப்பெரியாரிடம் தமிழ் இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும், சோதிடம், வைத்தியம் முதலிய கலைகளையும் கருத்தூன்றிக் கற்கலானார்.

சண்முகனார் தமது பதினான்காம் வயது முதல் பதினெட்டாம் வயதுவரை—ஐந்து ஆண்டுகள்—முன்சொன்ன சிவப்பிரகாச சுவாமிகளிடம் தமிழ் பயின்றார்; நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி, தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைப் பேரூக்கத்துடன் கற்றார்; தொல்

காப்பியமே பழமையும் பெருமையும் வாய்ந்த நூல். ஆதலால் அவர், ஆயிரத்துக்கு மேற்பட்ட அதன் சூத்திரங்களையும் முக்கியமான உரைப் பகுதிகளையும் மனப் பாடம் செய்து ஆசிரியரிடம் ஒப்பித்தார்; புறநானூறு முதலிய சங்க நூல்களை ஐயம் திரிபு அறக் கற்ருர். பின்வந்த தேவாரத் திருமுறைகளைத் தாமாகவே பயின்ருர்; வைணவப் பிரபந்தங்கள், சிந்தாமணி, பெரிய புராணம், கம்பராமாயணம், கந்தபுராணம் முதலிய பின்னூல்களையும் முறையாகக் கற்ருர். இங்ஙனம் ஐந்தாண்டுகள் அழுத்தமாகக் கற்ற கல்வியின் பயனுய், அவர் சோழவந்தனில் பதினெட்டு வயதிற்குள் பெரும் புலவரென மதிக்கப்பட்டார்.

# 2. தமிழாசிரியர் பணி

## தமிழாசிரியர்

அரசப்பபிள்ளை சண்முகனரது பதினுருவது வயதிலேயே காலமானர். ஆயினும் சண்முகனர் மேலும் இரண்டாண்டுகள்வரை தமிழ் கற்பதிலேயே கவனத்தைச் செலுத்தினர்; பிறகு பதினெட்டு வயது முதல் இருபது வயது வரை தந்தையார் கவனித்து வந்த உழவுத் தொழிலைக் கவனித்துவந்தார்; தமது இருபத்தோராம் வயதில்–1890-இல் மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக அமர்ந்தார். அப்பள்ளியில் அவர் பன்னிரண்டு ஆண்டுகள் (1902 வரை) பணியாற்றினர். அக்காலத்தில் அவரிடம் பயின்ற மாணவருட் சிலர் இக்காலத்தில் சிறப்பு வாய்ந்த தென்னுட்டு அறிஞர்களாக இருந்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பாண்டிய நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் குறிப்பிடத்தக்க மட்டப்பாறை வேங்கடராமையரும், எஸ். பட்டாபிராமையரும் சண்முகனரிடம் தமிழ்க் கல்வி பயின்றவர்களே.

## கற்பிக்கும் ஆற்றல்

சண்முகனர் கல்விக்கு உயர்நிலைப்பள்ளி ஏற்றதன்று; ஆயினும், பாடம் சொல்லும் ஆற்றல் இயற்கையிலேயே அமையப்பெற்ற அவர், ஆங்கில ஆசிரியர்களைப் போல மிக எளிய முறையில் இக்கால உதாரணங்களைக் கொண்டு இலக்கண பாடங்களைக்

கற்பிப்பது வழக்கமாம். செய்யுட்களின், உயிர்நிலைக் கருத்தைமுதலில்கூறி விளங்கவைத்துப் பின்னர் அருஞ்சொற் பொருள் கூறி, பிள்ளைகளையே செய்யு ளின் பொருள் உணருமாறு செய்யும் இக்கால முறை யைச் சண்முகனர் அக்காலத்திலேயே கையாண்டார். என்பது அவரது ஆசிரியத் தகுதியை நன்கு காட்டுவதாகும். சண்முகனர் பெரும் புலமையை நன்கு அறிந்த பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் தலைமை ஆசிரியரும் அவரிடம் மட்டற்ற அன்புட னும் மரியாதையுடனும் நடந்துவந்தனர். பிள்ளைகள் 'தமிழ் ஐயா' என்று அவரைப் பேரன்புடன் அழைப்பது வழக்கம்.

**மதுரையில் தமிழ்ச் சங்கம்**

1901-ஆம் ஆண்டு சென்னை மாகாண அரசியல் மாநாடு மதுரை மாநகரில் கூடியது. அதன் வரவேற்புக் கழகத் தலைவராக இருந்தவர் பாலவநத்தம் சமீன்தார் **பாண்டித்துரைத் தேவர்**. அவர் கம்ப ராமாயணம், திருக்குறள் என்னும் இரண்டு நூல்களில் சில செய்யுட்களைப் பார்க்க அந்நூல்களைப் பெற விரும்பினர். ஆயின், மதுரையில் ஒருவரிடமும் ஒரு பிரதியும் இல்லை என்பதை அறிய, அவர் வியப்பும் வருத்தமும் கொண்டார். பாண்டியர்கள் தமிழ் வளர்த்த மதுரையில் தமிழ் நூல்கள் இல்லாதது கண்டு மனம் புழுங்கினர்; அங்கு ஒரு தமிழ்ச் சங்கத்தை நிறுவி, தமிழை நாடெங்கும் வளர்க்க வேண்டுமென்று உறுதி கொண்டார். அவரது உறவினரான இராமநாதபுரம் அரசரும் அந்த

யோசனைக்கு இணங்கினூர். பிரபுக்களாகிய நண்பர்கள் பலரும் அவர் கருத்தை ஆதரித்தனர். முடிவில் 1901-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ஆம் நாள் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப் பட்டது. அன்று நாடறிந்த பெரும் புலவர்கள் எல்லாம் அங்குக் கூடியிருந்தனர். அவருள் டாக்டர் உ. வே. சாமிநாதையர், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மறைமலையடிகள், சேதுசம்ஸ்தானத்துப் பெரும் புலவர் ரா. இராகவையங்கார், நமது சோழவந்தான் சண்முகம் பிள்ளை, திருமயிலைச் சண்முகம் பிள்ளை என்பவர் குறிப்பிடத் தக்கவராவர்.

சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூல் ஆராய்ச்சிச்சாலை முதலியன அன்றே தொடங்கப்பட்டன. அன்றுமுதல் மூன்று நாள்வரை புலவர் பெருமக்களின் சொற்பொழிவுகள் நடைபெற்றன. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைக்குத் திரு. நாராயண ஐயங்கார் என்பவர் தலைமையாசிரியராக நியமனம் பெற்றூர். பெரும் புலவரான ரா. இராகவையங்கார் நூற்பதிப்பு, ஆராய்ச்சித்துறை, திங்களிதழ் நடத்துதல் என்னும் மூன்று துறைகளில் தலைவராக அமர்த்தப்பட்டார். பாண்டியன் புத்தக சாலைக்குச் சேதுபதி அரசரும், பாண்டித்துரைத் தேவரும் அளித்த நூல்கள் மிகப்பலவாகும்.

### சங்கத்தில் தமிழ் வகுப்புகள்

தமிழ்க் கல்விப் பயிற்சி மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டது. செம்மையான தேர்வு முறையில் தமிழ் அறிவு வளர்வதற்கு என்று இவ்வகுப்புகள் ஏற்

பட்டன. அவை பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்பன. முதல் வகுப்பில் ஓராண்டும் அடுத்த இரண்டிலும் இரண்டு இரண்டு ஆண்டுகளும் மாணவர் பயிற்சி பெறவேண்டும். இவ்வாறு ஐந்தாண்டுகள் கல்வி பயிலும் மாணவர்க்குக் கல்லூரியில் உண்டி, விடுதி முதலியன கொடுக்கப்பட்டன. இங்ஙனம் நாட்டில் முறையான தேர்வுகளைத் தமிழில் முதல் முதல் அமைத்தது மதுரைத் தமிழ்ச் சங்கமே யாகும். இவ்வகுப்புகளுக்குரிய பாடநூல்களைக் கற்பிக்க ஆசிரியர் பலர் அமர்த்தப்பட்டனர். தேவர் அவர்களின் முயற்சிப் பல்லோருதவியால் நன்முறையில் இங்ஙனம் பயனளித்தது.

**சங்கத்தில் சண்முகனார் ஆசிரியர்**

பாண்டித்துரைத் தேவர் சண்முகனாரது பெரும் புலமையை நேரிற் கண்டது முதல் அவரைப் பெரிதும் மதித்து நடந்துவந்தார்; அவ்வப்போது அவருக்குத் தம்மாலான உதவிகளைச் செய்துவந்தார்; அவருடைய ஆணித்தரமான சொற்பொழிவுகளைக் கேட்டு எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தார். சங்கம் தோன்றிய இரண்டாம் ஆண்டு தமிழ்க் கல்லூரியில் ஆசிரியர் பதவி காலி ஏற்பட்டது. பாண்டித்துரைத் தேவர் சண்முகனாரை அழைத்து, உயர்நிலைப் பள்ளி வேலையை விடுத்துத் தமது கல்லூரிக்கு வந்துவிடுமாறு வேண்டினர். சண்முகனாரும் அவ்வாறே தமது உயர்நிலைப் பள்ளி வேலையை விடுத்துக் கல்லூரியில் ஆசிரியரானார். பெரும் புலவராகிய சண்முகனாருக்கும் இவ்வேலை இன்பத்தைக் கொடுத்தது. பண்டித

வகுப்பு மாணவர்கள் அவரது தமிழறிவையும் கற்பிக்கும் ஆற்றலையும் அறிந்து, அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். சண்முகனார் அக்கல்லூரியில் நான்கு ஆண்டுகள் இருந்து தொண்டு செய்தார். அக்காலத்தில் 'செந்தமிழ்' என்னும் திங்கள் தாள் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்தே வெளிவந்தது. சண்முகனார் அத்தாளிலும், விவேகபானு, தமிழகம் ஞானசாகரம் முதலிய மாத வெளியீடுகளிலும் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார்.

## ஆதீனத்தில் ஆதரவு

தமிழ் நாட்டிலுள்ள சைவ ஆதீனங்களில் மிக்க பழமையும் பெருமையும் உடையது திரு ஆவடுதுறை ஆதீனம். அவ்வாதீனத்தைச் சேர்ந்த துறவிகள் சிறந்த கல்விமான்களாக இருந்தவர்கள். அவர்களுள் அம்பலவாண தேசிகர் என்பவர் சண்முகனார் காலத்தில் ஆதீனத் தலைவராக இருந்தார். அவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி இம்மூன்றிலும் வல்லவர்; புலவர்கள் புலமையை அளந்து அதற்கேற்பப் பொருளை வழங்கும் இயல்புடையவர். அவர் நமது சண்முகனார் சிறப்பைக் கேள்வியுற்றார்; சண்முகனார் மதுரைக் கல்லூரியிலிருந்து விலகிய பிறகு அவரைத் தமது ஆதீனத்துக்கு வரவழைத்தார்; நேரில் கண்டு அளவளாவினார்; அவரது பேரறிவை எண்ணி எண்ணி வியந்தார். தமது ஆதீனத்திலிருந்த தம்பிரான் பலருக்கும் சிறிது காலம் பாடம் சொல்லுமாறு செய்தார்; முடிவில் மிக்க சிறப்பினைச் செய்து சோழவந்தானுக்கு வழிகூட்டி அனுப்பினார்.

## 3. தமிழ்த்தொண்டும் நற்பண்புகளும்

### பெயர் மாற்றம்

அரசப்பப் பிள்ளையின் மகனார் ஆகிய நமது சண் முகனாரை மக்கள் சண்முகம் பிள்ளை என்று அழைத் தனர். ஆனால் அதே சமயத்தில் திருமயிலை சண் முகம் பிள்ளை என்றொரு பெரும்புலவர் இருந்தார். ஆதலால் பெயரளவில் குழப்பம் உண்டாதல் கூடாது என்பதை எண்ணிய சண்முகனார், அரசஞ் சண் முகனார் என்று தம் பெயரை மாற்றி அமைத்துக் கொண்டார்.

### சண்முகனார் இயற்றிய நூல்கள்

சண்முகனார் 1911-ஆம் ஆண்டு தமது 47-ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அந்தக் குறுகிய காலத்திற்குள் அவர் செய்துள்ள நூல்கள் பல. அவற்றுள் (1) முருகக் கடவுள் கலம்பகம், (2) இன் னிசை இருநூறு, (3) பஞ்ச தந்திர வெண்பா, (4) மதுரைச் சிலேடை வெண்பா, (5) மதுரை மீனாட்சி அம்மை சந்தத் திருவடிமாலை, (6) திருவள்ளுவர் நேரிசை, (7) திருக்குறள் சண்முக விருத்தி, (8) தொல் காப்பியம்—சண்முக விருத்தி, (9) ஆகுபெயர்—அன் மொழித் தொகை ஆராய்ச்சி என்னும் நூல்கள்

சிறந்தவை ஆகும்*. இவற்றுள்ளும் திருக்குறள்—சண்முக விருத்தியும், தொல்காப்பியம்—சண்முக விருத்தியும் கவனிக்கத் தக்கவை. திருக்குறளுக்கு நமது சண்முகனார் தாமாக எழுதிய விரிவான உரையைக் கொண்ட நூலே திருக்குறள்—சண்முக விருத்தி என்பது.

தமிழிலக்கண நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியம். அதில் 1600-க்கு மேற்பட்ட சூத்திரங்களிருக்கின்றன. அவற்றுக்குப் பொருள் எழுதிப் பெயர் பெற்ருேர் சிலர். அவர்களுக்குப் பல நூற்ருண்டுகள் பின்வந்த சண்முகனார் அவர்கள் உரையில் சில தவறுகள் இருத்தலைக் கண்டறிந்து வெளியிட்டார்; பிறகு தொல்காப்பியத்துக்குத் தாமே விரிவான உரை எழுதி அழியாப் புகழ் பெற்ருர். சண்முகனார் காலத்தில் அவரை இலக்கணத்தில் வெல்லத்தக்க அறிஞர்கள் இல்லை என்லாம்.

## உயிர்காத்த உபகாரி

சண்முகனார் சிறந்த ஒழுக்கமுடையவர். உண்மை பேசுதல், அடக்கமுடைமை, நாநயம், நன்றி மறவாமை முதலிய நற்பண்புகள் வாய்க்கப் பெற்றவர். அவர் ஒரு நாள் மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் நீராடச் சென்றபொழுது, படிமீது இருந்த பாசியினால் கால் வழுக்கிக் குளத்தில் விழுந்து விட்டார். அப்பொழுது அப்பாதை வழியாகத் தம் வண்டியில் வந்துகொண்டிருந்த உத்தம பாளையம்

*பிள்ளைகள் இவற்றைப் பெயரளவில் அறிந்திருத்தல் சாலும்.

ஜமீன்தார் தம் வண்டியை விட்டு இறங்கி வந்து புலவரைக் காப்பாற்றினர்.

" காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது "

என்னும் திருக்குறளை மறவாத சண்முகனார் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் உத்தம பாளையம் ஜமீன்தார் தம்மைக் காப்பாற்றிய விவரத்தைக் கூறி நன்றி செலுத்தியுள்ளார்.

## பொய்யா மொழி

உத்தமபாளையம் ஜமீன்தாரும் சண்முகனாரும் ஒரு நாள் உலவச் சென்றபொழுது வெயில் கடுமை யாக இருந்தது. ஜமீன்தார் சண்முகனாரைப் பார்த்து, " புலவர் அவர்களே, ' நெற்கொண்டு போமளவும் நில் லாய் நெடுஞ்சுவரே ' என்று கம்பர் பாடச் சுவர் விழா மல் நின்றதாகக் கூறப்படுகிறதே ! தாங்களும் பெரும் புலவரல்லவா? நாம் உலாவி மீளும்வரை வெயிலின் கொடுமை குறையும்படி ஒரு செய்யுள் பாடுக, " என்று கூறிப் புலவர் முகத்தைப் பார்த்தார். நமது புலவர் பெருமான் நகைத்து, ' போய் வருமளவும் பொழி முகிலே!' என்ற கடைசி அடியையுடைய செய்யுளைப் பாடி முடித்தார். முடித்த அளவில் சிறிது தூரல் உண்டாயிற்றும். ஜமீன்தார் வியப்புற்றுப் புலவர் பெருமானைத் தழுவிக்கொண்டார்; இந்த நிகழ்ச்சியை எல்லோரிடமும் சொல்லி மகிழ்ந்தார்.

## நிலைத்த புகழ்

அரசஞ் சண்முகனார் தம் காலத்துப் பெருந் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர் ; நன்றாய்த் தமிழ் படித்த காரணத்தால் பிறர்க்கஞ்சாத சிங்கமாக விளங்கினார் ; அரசர் முதல் ஆண்டி ஈறாகத் தம்மை வருந்தி அழைத்து மரியாதை செய்யத்தக்க முறையில் நடந்து கொண்டார் ; அவர் பொருளைப் பெரிதெனை மதித்தவரல்லர் ; நல்லார் நட்பையும் இறைவன் அருளையுமே பெரிதெனை மதித்தவர். தமிழ் இலக்கணத்தில் நெடுங் காலமாக இருந்த சந்தேகங்கள் பல சண்முகனாரால் நீக்கப்பட்டன. அவருடைய விருத்தி உரையால் திருக்குறட் பாக்கள் சிலவற்றுக்குப் பொருத்தமான பொருள் விளங்க வழி ஏற்பட்டது. அவருடைய பிற நூல்கள் அவருடைய பெரும் பக்தியைக் காட்டுவன. அப்புலவர் மேலும் பல்லாண்டுகள் இருந்திருப்பாராயின், மேலும் பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டிருக்கலாம். ஆயினும், அவர் தம் காலத்தில் செய்துள்ள தொண்டு என்றும் மறக்கத் தக்கதன்று. அவரது பெரும் புலமைக்கும் அவர் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி நூல்களுக்கும் நமது வணக்கம் உரியதாகுக.

**சண்முகனார் திருப்புகழ் நீடு வாழ்க !**